https://t.me/tnpscfree

# இந்திய அரசியலமைப்பு

ஒரு நாட்டு மக்களை ஆட்சி புரியும் அடிப்படையான அரசியல் முறையைக் கூறுவதே அந்நாட்டின் அரசியலமைப்பு ஆகும். அரசின் தலையாய அங்கங்களாகிய சட்டமியற்றும், சபை நிர்வாகம். நீதித்துறை ஆகியவற்றைத் தோற்றுவித்து, அவற்றின் அதிகாரங்களை வரையறுத்து, பொறுப்புகளைப் பகுத்து, பரஸ்பரம் அவற்றுக்கு இடையேயும், அவற்றுடன் மக்களுக்கும் உள்ள உறவுகளை நெறிப்படுத்துவதே அரசியலமைப்பு ஆகும்.

## வரலாற்று பின்னனி (Historical Background)

நமது அரசியலமைப்பின் பல்வேறு சிறப்பியல்புகள் ஆங்கிலேயே ஆட்சியின் தாக்கத்தை கொண்டுள்ளது. ஆங்கிலேயர்களால் ஏற்படுத்தப்பட்ட காலனி ஆதிக்க சட்டங்கள் (colonial administration) நமது அரசியலுக்கும் அரசியலமைப்புக்கும் துாண்டுதலாக உள்ளன. அவை:

- ஒழுங்குப்படுத்தும் சட்டம் 1773
- பிட்ஸ் இந்திய சட்டம் 1784
- பட்டயச் சட்டம் 1833
- பட்டயச் சட்டம் 1853
- இந்திய அரசுச் சட்டம் 1853
- இந்திய கவுன்சில் சட்டம் 1861
- இந்திய கவுசில் சட்டம் 1892
- மின்டோ–மார்லி சீர்திருத்தங்கள் 1909
- மாண்டகு–கெம்ஸ்போர்டு சீர்திருத்தங்கள் 1919
- இந்திய அரசுச்சட்டம் 1935.

## அரசியல் நிர்ணய சபை குறிப்புகள்

- மே 16 1946 **காபினெட் தூதுக்குழு அரசியல் நிர்ணய சபையை குறித்து அறிக்கை வெளியிட்டது.**
- **9 டிசம்பர்** 1946 டாக்டர் சச்சிதானந்த் சின்ஹா இந்திய அரசியல் நிர்ணய சபையின் தற்காலிக தலைவராக நியமிக்கப்பட்டார்.
- 11 **டிசம்பர்** 1946 டாக்டர் ராஜேந்திர பிரசாத் இந்திய அரசியல் நிர்ணய சபையின் நிரந்தர தலைவராக நியமிக்கப்பட்டார்.
- இந்திய அரசியல் நிர்ணய சபை 13 குழுக்களை அமைத்தது.
- தோராயமான வரைவு வி.என்.ராவ் அவர்களால் தயாரிக்கப்பட்டது.
- **டாக்டர். பி.ஆர். அம்பேத்கர் தலைமையில் அரசியல் சட்ட வரைக்குழு ஒன்று 1947 ஆகஸ்டு 29 ஆம் தேதி நியமிக்கப்பட்டது.**
- மற்ற உறுப்பினர்கள்: கோபாலஸ்வாமி ஐய்யங்கார், ஆலடி கிருஷ்ணஸ்வாமி ஐயா கே.எம்.முன்சி. சையது முகமது சாதுலா, என். மாதவராவ், டி.டி. கிருஷ்ணமாச்சாரி.
- 1949 நவம்பர் 26 ஆம் தேதி அரசியல் நிர்ணய சபை வாயிலாக இந்திய இறையாண்மை மக்களாட்சிக் குடியரசின் அரசியலமைப்பை இந்திய மக்கள் இயற்றி **ஏற்றுக் கொண்டு** தமக்குத்தாமே அளித்துக் கொண்டனர்.
- **1950 ஜனவரி 26ஆம் தேதி முதல் கொண்டு இந்திய அரசியலமைப்பு நடைமுறைக்கு வந்தது.**





Downloaded from https://t.me/tnpscfree


https://t.me/tnpscfree
Join Telegram
Channel :
@tnpscfree
https://t.me/sasiclasses

https://t.me/tnpscfree

- அரசியலமைப்பை உருவாக்கும் பணியை மூன்று ஆண்டுகளுக்குள்ளாகவே அரசியல் நிர்ணயசபை வெற்றிகரமாக நிறைவேற்றிவிட்டது.(2 Years 11 months 18 days )

**இந்திய அரசியலமைப்பின் சிறப்பு அம்சங்கள்**

1) **உலகிலேயே மிக நீளமான எழுதப்பெற்ற அரசியலமைப்பு :**

இந்திய அரசியலமைப்பு உலகிலேயே மிக நீளமான எழுதப்பட்ட (Written constitution) அரசியலமைப்பு ஆகும் இது **465** பிரிவுகள் **25** பகுதிகள் மற்றும் **12** அட்டவணைகளைக் கொண்டது. இந்நீண்ட அரசியலமைப்பிற்கான முக்கிய காரணங்கள்:

- நாட்டின் பரந்த புவியமைப்பு
- காலனியாதிக்க சட்டங்கள் மற்றும் அரசியலமைப்பின் வளர்ச்சி ஆகியவற்றால் ஏற்பட்ட அழுத்தம் போன்ற வரலாற்று காரணிகள்.
- ஜம்மு காஷ்மீர் தவிர நாடு முழுவதற்கும் ஒரே அரசியலமைப்பு.
- அரசியலமைப்பு நிர்ணயசபையில் (Constituent Assembly) இடம் பெற்ற சட்ட வல்லுனர்களின் ஆதிக்கம்.

2) **பல நாடுகளின் அரசியலமைப்பின் தன்மைகளை நமது இந்திய அரசியலமைப்பு எடுத்துக் கொண்டுள்ளது**

- அடிப்படை உரிமைகள் (Fundamental Rights) அமெரிக்கா
- முகப்புரை (Preamble)... அமெரிக்கா
- நீதிபதிகள் பதவி நீக்கம் (Removal of judges of SC-HC)..... அமெரிக்கா
- தனித்தியங்கும் நீதித்துறை (Independent judiciary)...அமெரிக்கா
- நீதிப்புணராய்வு (Judicial Review)...... அமெரிக்கா
- அடிப்படைக் கடமைகள் (Fundamental Duties)....... ரஷ்யா
- ஐந்தாண்டுத் திட்டம் (Five year plan)...... ரஷ்யா
- வழிகாட்டு நெறிமுறைகள் (DPSP)... அயர்லாந்து
- ராஜ்யசபை உறுப்பினர் நியமனம் (Nomination of Rajyasabha Member) அயர்லாந்து.
- குடியரசுத் தலைவர் தேர்தல் முறை (Method of election of the President)... அயர்லாந்து.
- பாராளுமன்ற முறை (Parliamentary Type).......இங்கிலாந்து
- சட்டத்தின் ஆட்சி (Rule of law)..... இங்கிலாந்து
- ஒற்றைக் குடியுரிமை (Single citizenship).......... இங்கிலாந்து
- கீழ் சபைக்கு அதிக அதிகாரம் (Lower house more powerful).... இங்கிலாந்து
- பாராளுமன்ற இரு அவை (Bicameral Parliament).....இங்கிலாந்து
- மக்களவை தலைவர் (Speaker in the Lok Sabha)...இங்கிலாந்து
- கூட்டாட்சி முறை (Federal System)... கனடா
- நெருக்கடி நிலையின் போது அடிப்படை உரிமைகள் ரத்து(Suspension of FR during Emegency )............ஜெர்மன்
- பொதுப்பட்டியல் (Concurrent List)..... ஆஸ்திரேலியா
- மத்திய – மாநில உறவுகள் (Centre-State Relations)..... ஆஸ்திரேலியா
- அரசியலமைப்புச் சட்ட திருத்தம் (Amendment of Constitution)..... தென் ஆப்பிரிக்கா
- தற்போதைய அரசியலமைப்பானது ***75%* 1935ம் ஆண்டில் இந்திய அரசாங்க சட்டத்தின் மறுபதிப்பு**
- நெருக்கடி நிலை - இந்திய அரசாங்கச் சட்டம் 1935
- அரசு நிர்வாக அமைப்பு முறை-இந்திய அரசாங்கச் சட்டம் 1935
- ரிசர்வ் பேங்க் ஆ∴ப் இந்தியா தோற்றம்-- இந்திய அரசாங்கச் சட்டம் 1935



Downloaded from https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree

## அரசியலமைப்பு பகுதிகள்

| பகுதிகள் | தலைப்பு | விதிகள் |
|---|---|---|
| I | ஒன்றியம் அதன் ஆட்சி பணிகள் | 1-4 |
| II | குடியுரிமை | 5-11 |
| III | அடிப்படை உரிமைகள் | 12-35 |
| IV | அரசின் நெறிமுறை கோட்பாடுகள் | 36-51 |
| IV-A | அடிப்படை கடமைகள் | 51A |
| V | மத்திய அரசு | 52-151 |
| VI | மாநில அரசு | 152-237 |
| VII | நீக்கப்பட்டது.(1956- 7-வது சட்டதிருத்தத்தின்படி நீக்கப்பட்டது | 238 |
| VIII | யூனியன் பிரதேசங்கள் | 239-242 |
| IX | பஞ்சாயத்து | 243-243O |
| IX-A | நகராட்சி | 243P – 243ZG |
| XI-B | கூட்டுறவு (97-வது சட்டதிருத்தம்) -2011 | 243ZH-243ZT |
| X | தாழ்த்தப்பட்டோர் ரு பழங்குடியினர் பரப்பிடங்கள் | 244-244A |
| XI | மத்திய, மாநில அரசுகளுக்கிடையேயான உறவுகள் | 245-263 |
| XII | நிதி, சொத்து, ஒப்பந்தம் தொடர்பானவை | 264-300A |
| XIII | இந்திய எல்லைக்குள் வியாபாரம், வணிகம் தொடர்பானவை | 301-307 |
| XIV | மத்திய மற்றும் மாநில அரசுகளின் கீழான பணிகள் | 308-383 |
| XIV-A | தீர்ப்பாயங்கள் | 323A-323B |
| XV | தேர்தல்கள் | 324-329A |
| XVI | சில வகுப்பினர்கள் தொடர்பான சிறப்பான சட்ட வகைமுறைகள் | 330-342 |
| XVII | ஆட்சிமொழிகள் | 343-351 |
| XVIII | நெருக்கடி நிலைகள் | 352-360 |
| XIX | பிறவகைமுறைகள் | 361-367 |
| XX | அரசியலமைப்பு திருத்தம் | 368 |
| XXI | தற்காலிக, இடைகால, சிறப்பு அந்தஸ்துகள் | 369-392 |
| XXII | அரசியலமைப்பின் தலைப்பு, தொடக்கம், அதிகார பரவல் & திரும்ப பெறப்பட்ட விதிகள் | 393-395 |





Downloaded from https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree

## இந்திய அரசியலமைப்பின் அட்டவணைகள்

### 1வது அட்டவணை

- மாநிலங்கள் & யூனியன் பிரதேசங்கள்
- மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் எல்லைகள் மற்றம் பெயர்கள் பற்றி குறிப்பிடுகிறது.

### 2வது அட்டவணை

- சம்பளம், படிகள், சலுகைகள்
- குடியரசுத்தலைவர், உச்சநீதிமன்ற நீதிபதி, ஆளுநர், மக்களவை சபாநாயகர் மற்றும் துணை சபாநாயகர், மாநிலங்களவைத் தலைவர் மற்றம் துணைத் தலைவர், மாநில சட்டப்பேரவை சபாநாயகர்கள், துணை சபாநாயகர்கள், மாநில சட்ட மேலவை தலைவர்கள் மற்றும் துணைத்தலைவர்கள், உயர்நீதிமன்ற நீதிபதிகள், CAG, ஆகியோரின் சம்பளம், படிகள் மற்றும் சலுகைகள் பற்றி குறிப்பிடுகிறது.

### 3வது அட்டவணை

- பதவிபிரமாணம், உறுதிமொழிகள்
- மத்திய, மாநில அமைச்சர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், உச்சநீதிமன்ற நீதிபதிகள், CAG, ஆகியோரின் பதவிபிரமாணம் மற்றும் உறுதிமொழிகள்.

### 4வது அட்டவணை

- ராஜ்யசபா இடஒதுக்கீடு (Allocation of Seats in Rajya Sabha)
- மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு ராஜ்யசபாவில் ஒதுக்கப்பட்ட இடங்கள் பற்றி குறிப்பிடுகிறது.

### 5வது அட்டவணை

- SC/ST பகுதிகளில் நிர்வாகம் மற்றும் கட்டுப்பாடுகள்
- நாட்டிலுள்ள தாழ்த்தப்பட்ட (SC) மற்றும் பழங்குடியினர் (ST) பகுதிகளின் நிர்வாகம் மற்றும் கட்டுப்பாடுகள் மேற்கொள்வது பற்றி குறிப்பிடுகிறது.

### 6வது அட்டவணை

- வடகிழக்கு மாநிலங்களில் ST பகுதி நிர்வாகம்
- Assam, Megalaya, Tiripura, Mizoram, ஆகிய வடகிழக்கு மாநிலங்களில் ST பகுதிகளை நிர்வாகம் மேற்கொள்வது பற்றி குறிப்பிடுகிறது.

### 7வது அட்டவணை

- மத்திய - மாநில அரசுகளுக்கிடையே அதிகாரங்களை பகிர்ந்து கொள்வது பற்றி குறிப்பிடுகிறது
- மத்திய மாநில அரசுகளுக்கிடையே அதிகாரங்கள் மூன்று பட்டியல்களாக பிரிக்கப்பட்டுள்ளது.
  - (i) மத்திய பட்டியல் (Central list)
  - (ii) மாநில பட்டியல் (State list)
  - (iii) பொதுப்பட்டியல் (Concurrent list)

### மத்திய பட்டியல்



Downloaded from https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree

- மத்திய அரசின் கட்டுப்பாட்டிலுள்ள துறைகள் மீது மத்திய அரசு (பாராளுமன்றம்) சட்டம் இயற்றி அதிகாரம் செலுத்தும்.
- மத்திய பட்டியலில் ஆரம்பத்தில் - 97 துறைகள் (26.01.1950)
  தற்போது - 100 துறைகள் (2015)

எ.கா:

- வங்கி
- பணம் வெளியிடுதல்
- அஞ்சல் தந்தி
- பாதுகாப்பு
- ரயில்வே
- அணுசக்தி
- கணக்கெடுப்பு
- தகவல்தொடர்பு, தகவல் ஒலிபரப்பு
- விமானப் போக்குவரத்து
- தணிக்கை - மத்திய பட்டியலில் முக்கியத்துறைகளாகும்.

## மாநிலப் பட்டியல்

- மாநில அரசின் கட்டுப்பாட்டிலுள்ள துறைகள் மீது மாநில அரசு (சட்டமன்றம்) சட்டம் இயற்றி அதிகாரம் செலுத்தும்
- மாநில பட்டியலில் ஆரம்பத்தில் - 66 துறைகள் (26.01.1950)
  தற்போது - 61 துறைகள் (2015)

1976ல் - 42வது சட்ட திருத்தத்தின்படி

- கல்வி
- காடுகள் (அ) வனங்கள்
- எடை அளவீடுகள்
- வன விலங்கு பாதுகாப்பு
- நீதி நிர்வாகம் ஆகிய 5 துறைகள் மாநில பட்டியலிலிருந்து பொதுப்பட்டியலுக்கு மாற்றப்பட்டது.

**எ.கா:**

- சட்டம் ஒழுங்கு, காவல், சிறை
- பொது சுகாதாரம்
- உள்ளாட்சி
- மீன்வளம்
- சந்தைகள்
- திரை அரங்குகள்
- கேளிக்கை, சூதாட்டம்
- வேளாண்மை – மாநிலப்பட்டியலின் முக்கிய துறைகளாகும்.

## பொதுப் பட்டியல்

- குறிப்பிட்ட துறைகள் மத்திய அரசு, மாநில அரசு ஆகிய இரு அரசுகளின் கட்டுப்பாட்டில் இருக்கும்.
- இத்துறைகள் மீது இரு அரசுகளும் சட்டமியற்றும்.
- மத்திய சட்டத்திற்கும், மாநில சட்டத்திற்கும் முரண்பாடு ஏற்பட்டால் மத்திய சட்டமே அதிகாரமிக்கது.
- பொதுப் பட்டியலில் ஆரம்பத்தில் - 47 துறைகள் (26.01.1950)



Downloaded from https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree

தற்போது - 52 துறைகள் (2015)

எ.கா

- கல்வி
- காடுகள்
- எடை அளவீடுகள்
- வனவிலங்கு பாதுகாப்பு
- தொழிலாளர் நலன்
- எரிசக்தி, மின்சாரம்
- நீதி நிர்வாகம்
- மருந்துகள்
- மக்கள்தொகை கட்டுப்பாடு
- செய்தித்தாள்- பொதுப்பட்டியலிலுள்ள முக்கியத்துறை

**8வது அட்டவணை**

- அரசியலமைப்பு சட்டத்தால் அங்கீகரிக்கப்பட்ட மொழிகள் பற்றி குறிப்பிடுகிறது.
- அரசியலமைப்பு சட்டத்தால் அங்கீகரிக்கப்பட்ட மொழிகள் - 22
- இந்தியாவில் பேசும் மொத்த மொழிகள் - 1652

**9வது அட்டவணை**

- பல்வேறுவகையான சட்டங்கள் மற்றும் விதிகள்
- 1951 – 1வது சட்ட திருத்தத்தின்படி 9வது அட்டவணை அரசியமைப்பில் சேர்க்கப்பட்டது.
- நிலச்சீர்திருத்தம், ஜமீன்தாரிமுறை உள்ளிட்ட பல்வேறு வகையான சட்டங்கள் மற்றும் விதிகள் பற்றி குறிப்பிடுகிறது.
- ஆரம்பத்தில் (1951) 9வது அட்டவணையில் 13 சட்டங்கள் இருந்தது. தற்போது 282 சட்டங்கள் உள்ளது.
- தமிழ்நாட்டில் 69மூ இடஒதுக்கீட்டை உறுதி செய்யும். தமிழ்நாடு இட ஒதுக்கீடுகள் சட்டம் 1994ல் 9வது அட்டவணையில் இடம்பெற்றுள்ளது.

**10வது அட்டவணை**

- கட்சித்தாவல் தடை சட்டம். நாடாளுமன்றம் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களின் கட்சித்தாவலை தடைசெய்கிறது.
- 1985 – 52 – வது சட்டதிருத்தத்தின்படி 10வது அட்டவணை அரசியலமைப்பில் சேர்க்கப்பட்டது.
- 2003 – 91வது சட்டதிருத்தத்தின்படி 10வது அட்டவணை திருத்தப்பட்டது.

**11வது அட்டவணை**

- பஞ்சாயத்து அமைப்புகள் (அ) கிராமபாலிகா சட்டம்
- 1992- 73வது சட்டத்திருத்தத்தின்படி 11வது அட்டவணை அரசியலமைப்பில் சேர்க்கப்பட்டது.
- 24.04.1993 ல் நடைமுறைக்கு வந்தது
- பஞ்சாயத்துராஜ் அமைப்புகளின் 3 பிரிவுகள்
  - (i) கிராம பஞ்சாயத்து
  - (ii) ஊராட்சி ஒன்றியம்
  - (iii) மாவட்ட ஊராட்சி அதிகாரங்கள், கடமைகள், பொறுப்புகள் பற்றி 29 தலைப்புகளில் குறிப்பிடுகிறது



Downloaded from https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree

<u>12வது அட்டவணை</u>

- நகராட்சி அமைப்புகள், நகர்பாலிகா சட்டம்
- 1992ல் 74வது சட்டத்திருத்தத்தின்படி 12வது அட்டவணை அரசியலமைப்பில் சேர்க்கப்பட்டது.
- நகராட்சி அமைப்புகள் தொடர்பான (ை) பேரூராட்சி (ை) நகராட்சி (ை) மாநகராட்சி 18வகையான அதிகாரங்கள், கடமைகள், பொறுப்புகள் பற்றி குறிப்பிடுகிறது.

## முகப்புரை

- முகப்புரை எனப்படுவது. இயற்றப்பட்ட சட்டத்தை அறிமுகம் செய்து வைக்கும் பகுதியாகும். மேலும் அச்சட்டத்தின் கொள்கைகளை புரிந்து கொள்ளவும். சட்டமன்றத்தின் கருத்தை அறிந்து கொள்ளவும் சட்டத்தின் முகப்புரை பெரிதும் உதவுகிறது.

**"இந்திய மக்களாகிய நாம், இந்தியாவை ஒரு இறையாண்மை மிக்க, சமதர்மம் சார்ந்த, மதச்சார்பற்ற, மக்களாட்சி, குடியரசு அமைக்கவும், அதன் குடிமக்கள் அனைவருக்கும்.**

**சமூக, பொருளாதார, அரசியல் நீதி (JUSTICE) கிடைக்கவும்.**

**சிந்தனையில் சிந்தனையை வெளிப்படுத்துவதில், நம்பிக்கையில், பற்றுறுதியில் மற்றும் வழிபாட்டில் சுதந்திரமும் (LIBERTY),**

**தகுதி நிலையில் மற்றும் வாய்ப்பில் சமத்துவம் (EQUALITY), உறுதியாக அனைவருக்கும் கிடைக்கச் செய்யவும், தனி ஒருவரின் மாண்புக்கும்,**

**சகோதரத்துவத்தை (FRATERNITY) அனைவரிடத்தில் வளர்க்கவும், நாட்டின் ஒற்றுமைக்கும், ஒருமைப்பாட்டுக்கும் உறுதியளிக்கும்.**

**விழுமிய முறைமையுள்ள உறுதி பூண்டு, 1949 நவம்பர் இருபத்து ஆறாம் நாளாகிய இன்று நம்முடைய அரசியலமைப்பு நிர்ணய சபையில், ஈங்கிதனால், இவ்வரசியலமைப்பை ஏற்று சட்டமாக இயற்றி நமக்கு நாமே வழங்கிக் கொள்கிறோம்"**

- பெருபாரி வழக்கில் "முகப்புரையானது அரசியலமைப்பின் ஒரு பகுதி ஆகாது" என கூறப்பட்டது. (1960)
- கேசவானந்தபாரதி வழக்கில் உச்ச நீதிமன்ற பெருபாரி வழக்கின் கருத்தினை மறுத்து முகப்புரையானது அரசியலமைப்பின் ஒரு பகுதியே ஆகும் என்று கூறப்பட்டது. (1973)
- 1976ம் ஆண்டில் 42ஆவது அரசியல் திருத்தம் செய்யப்பட்டது. இத்திருத்தம் முகப்புரையில் மூன்று சொற்களை புகுத்தி உள்ளது. அதாவது***<u>சமதர்மநெறி. சமயச் சார்பின்மை. மற்றும் ஒருமைப்பாடு</u>***

| வழக்கு (Cases) | வருடம் | தீர்ப்புகள் (Judgements) |
|---|---|---|
| கோபாலன் வழக்கு | 1950 | ஷரத்து 21–ன் படி சட்டப்பூர்வமான நடவடிக்கைகளுக்கு எதிராக அல்லாமல் நிர்வாக நடவடிக்கைகளுக்கு எதிராக மட்டுமே பாதுகாப்பளிக்கப்பட்டுள்ளது என உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது. |
| சிங்கரி பிரசாத் வழக்கு | 1951 | உச்ச நீதிமன்றம், நாடாளுமன்றம் ஷரத்து 368–ன் கீழ் வழங்கப்பட்டுள்ளது அரசியயமைப்பையும், திருத்தும் அதிகாரம் அடிப்படை உரிமையையும் திருத்த செய்ய அதிகாரம் உண்டு |



Downloaded from https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree

| | | |
|---|---|---|
| | | என கூறியுள்ளது. |
| பெருபாரி பிரதேச வழக்கு | 1960 | முகப்புரை அரசியலமைப்பில் ஓர் பகுதி இல்லை என உச்ச நீதிமன்றம் கூறிஹத |
| கோலக்நாத்க்கும் எதிரான பஞ்சாப் மாநிலத்துக்கும் இடையிலான வழக்கு | 1967 | அடிப்படை உரிமைகள் அறிவெல்லை கடந்த மாற்றமுடியாத கருத்தாக வழங்கப்பட்டுள்ள நிலையை பாராளுமன்றம் சுருக்கவோ அல்லது எடுக்கவோ முடியாது என உச்ச நீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது. |
| கேசவானந்த பாரதி வழக்கு | 1973 | நாடாளுமன்றம் அரசியலமைப்பின் அடிப்படை கட்டமைப்புமாறாமல் எந்த ஒரு பொருண்மையை திருத்தம் செய்ய முடியும் நீதி மறு ஆய்வு என்பது அரசியலமைப்பின் மிக முக்கிய கூறாகும் எனவே இதனைஎடுக்க இயலாது. முகப்புரை அரசியலமைப்பின் பகுதியாகும் அதன் அடிப்படை கட்டமைப்பு மாறாமல் திருத்தம் செய்யலாம். |
| மேனகா வழக்கு | 1978 | வாழ்வதற்கான உரிமை, தனிநபர் சுதந்திரம் ஆகியவற்றை தகுந்த காரணத்திற்காக நேர்மையாக, வழங்கப்பட்டுள்ள சட்டத்தின் அடிப்படையில் அல்லாமல் பறிக்க இயலாது. |
| மினர்வா மில் வழக்கு | 1980 | வஞ்சகமான எண்ணம் அல்லது பொருத்தமல்லாத அல்லது பொருந்தாத வகையில் குடியரசு தலைவரால் அவசரி நிலை பிரகடனம் செய்யப்பட்டால் அதனை எதிர்த்து நீதி மன்றத்தை நாடலாம். |
| மண்டல் இந்திய அரசாங்கத்திற்கு எதிரான வழக்கு | 1992 | உயர் ஜாதியில் உள்ள ஏழைகளுக்கு 10 சதவீதம் ஒதுக்கீட்டை தள்ளுபடி செய்து சில நபந்தனைகளுடன் இதர பிற்பட்ட வகுப்பினருக்கான 27 சதவீத ஒதுக்கீட்டை உறுதி செய்தது உச்சநீதிமன்றம். |
| பொம்மை வழக்கு (Bommai Case) | 1994 | மதச்சார்பற்ற கொள்கையின் என்னும் அடிப்படையில் பரகடனம் செய்யப்பட்ட குடியரசுத் தலைவர் ஆட்சி உறுதி செய்தது மற்றும் ஷரத்து 356–ன் கீழ் நாட்டில் குடியரசுத் தலைவவர் ஆட்சியை அமுல்படுத்த சில நெறிகளை உச்சநீதிமன்றம் வகுத்துள்ளது.<br>சட்டமன்றத்தில் பெரும்பான்மை இருக்கும் வரை முதலமைச்சரை ஆளுநர் பதவி நீக்கம் செய்ய முடியாது அரசியலமைப்பு கூட்டாட்சி முறை சார்ந்து அந்த கூட்டாட்சி பண்பு அடிப்படை கூறாகும். |
| இந்திய ஆயுள் காப்பீட்ட 1995 கழக வழக்கு | 1995 | முகப்புரை அரசியலமைப்புடன் ஒருங்கிணைக்கப்பட்ட பகுதியாகும் என உச்ச நீதிமன்றம் கூறியது. |

## ஒன்றியம் மற்றும் அதன் பிரதேசம் (Union and its Territory)

- பகுதி–I உள்ள ஷரத்து 1 முதல் 4 வரை இதுபற்றி கூறுகிறது.
- இந்தியா சுதந்திரம் அடைந்தபோது 549 மன்னர் மாநிலங்கள் (Princely States)


Department of Employment and Training, Tamil Nadu
Study Material For Competitive Examinations

Downloaded from https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree

இந்தியாவுடன் இணைந்தன.

- ஹைதாராபாத், ஜீனாஹாத் மற்றும் காஷ்மீர் ஆகிய மூன்றும் இந்தியாவுடன் இணைய மறுத்தன.
- ஹைதாராபாத் போலீஸ் நடவடிக்கை மூலமாகவும், ஜீனாஹாத் வாக்கெடுப்பின் மூலமும் காஷ்மீர் **Instrument of Accession** மூலமும் இணைக்கப்பட்டன.
- 1950–ல் நான்கடுக்கு மாநில முறையை இந்திய அரசியலமைப்பு கொண்டிருந்தது (Part A,Part B,Part C & Part D states)
- **<u>தார் கமிஷன் (Dhar Commission):-</u>** மொழியின் அடிப்படையில் மாநிலங்களை சீரமைக்க 1948–ல் SK Dhar என்பவர்தலைமையில் குழு அமைக்கப்பட்டது. டிசம்பர் 1948–ல் குழுவானது நிர்வாக வசதியின் அடிப்படையில் மாநிலங்கள் சீரமைக்கப்பட வேண்டும். மொழியின் அடிப்படையில் அல்ல என அறிக்கை வழங்கியது.
- **<u>JVP Committee:-</u>** டிசம்பர் 1948 –ல் அமைக்கப்பட்டது ஏப்ரல் 1949–ல் அறிக்கை சமர்ப்பத்தது இக்குழுவும் மொழியின் அடிப்படையில் மாநிலங்களை பிரிப்பதை ஆதரிக்கவில்லை
- அக்டோபர்–1953–ல் ஆந்திராபிரதேஷ் என்ற முதல் மொழிவாரி மாநிலம் உருவாக்கப்பட்டது ( பொட்டி ஸ்ரீ ராமலு என்பவர் 56 நாட்கள் உண்ணாவிரதம் இருந்து உயிர்விட்டார் இதுவே மொழியின் அடிப்படையில் முதல் மாநிலம் உருவாவதற்கு காரணமாக அமைந்தது).
- **<u>பாசில் அலி கமிஷன்</u>**:- டிசம்பர்–1956–ல் அமைக்கப்பட்ட மூன்று உறுப்பினர் குழுவாகும் செப்டம்பர்–1955–ல் அறிக்கை சமர்ப்பித்து. மொழியின் அடிப்படையில் நிலைங்களை சீரமைக்கலாம் எனவும் ஆனால் “ஒரு மொழி ஒரு மாநிலம்“ என்ற கோட்பாடு கூடாது எனவும் பரிந்துரைத்தது. மேலும் நான்கடுக்கு முறையை ரத்து செய்ய முறையை பரிந்துரை செய்தது.
- **ஏழாவது அரசியலமைப்பு சட்டத்திருத்தம் – 1956–ன்படி States Reorganisation Act-1956 இயற்றப்பட்டு நவம்பர்–1 1956 முதல் 14 மாநிலங்கள் மற்றும் 6 யுனியன் பிரதேசங்கள் உருவாக்கப்பட்து.**

- தற்பொழுது 29 மாநிலங்கள் மற்றும் 7 யூனியன் பிரதேசங்கள் உள்ளன.
    - 1960 குஜராத் 15–வது மாநிலம்
    - 1963 நாகலாந்து 16–வது மாநிலம்
    - 1966 ஹரியானா 17–வது மாநிலம்
    - 1971 ஹிமாச்சல் பிரதேசம் 18–வது மாநிலம்
    - 1972 மணிப்பூர் (19–வது), திரிபுரா (20–வது) மற்றும் மேகாலாயா (21–வது மாநிலம்).
    - 1975 சிக்கிம் 22–வது மாநிலம்
    - 1987 மிசோரம் (23–வது), அருணாச்சல பிரதேசம் (24–வது) மற்றும் கோவா (25–வது
    - மாநிலம்)
    - 2000 சட்டீஸ்கர் (26–வது), உத்ரகாண்ட் (27–வது) மற்றும் ஜார்கண்ட் (28–வது மாநிலம்)
    - இறுதியாக ஆந்திரா மாநிலம் பிரிக்கப்பட்டு தெலுங்கான என்ற மாநிலம் 2014–ல் உருவாக்கப்பட்டது.



Downloaded from https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree

- **<u>மாநிலங்களின் பெயர் மாற்றம்:</u>**
  - மெட்ராஸ் மாநிலம் 1969–ல் தமிழ்நாடு என பெயர் மாற்றப்பட்டது.
  - 1973 மைசூர், கர்நாடகா என பெயர் மாற்றப்பட்டது.
  - 1992–ல் டெல்லி யூனியன் பிரதேசம் National Capital Territory of Delhi என
  - மாற்றப்பட்டது. (69–வது சட்டத்திருத்தம் 1991)
  - 2006–ல் உத்ரஞ்சல் மாநிலம், உத்தரகாண்ட் என பெயர் மாற்றப்பட்டது.
  - 2006–ல் பாண்டிச்சேரி, புதுச்சேரி என பெயர் மாற்றப்பட்டது.
  - 2011–ல் ஒரிசா, ஒடிசா என பெயர் மாற்றப்பட்டது.

## <u>ஒன்றியமும் அதன் ஆட்சி எல்லையும்</u>: (<u>ஷரத்து</u> 1-4( பகுதி-1)

- இந்தியா, அதாவது பாரதம் மாநிலங்களின் ஓர் ஒன்றியமாக இருத்தல் வேண்டும்.( ஷரத்து.1)
- மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் முதலாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளன.
- இந்திய பரப்பிடம் என்பது, மாநிலங்களின் பரப்பிடங்கள், முதல் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மத்திய அரசின் எல்லைகள் (UT) மற்றும் சேர்த்துக்கொள்ளப்படும் மற்ற பரப்பிடங்கள்.
- இந்திய ஒன்றியத்திற்குள் புதிய மாநிலங்களை சேர்த்துக் கொள்ளும் அதிகாரம் நாடாளுமன்றத்திற்கு உள்ளது. (ஷரத்து -2)
- புதிய மாநிலத்தை உருவாக்கவும், மாநில பரப்புகளை, எல்லைகளை, பெயர்களை மாற்றவும் அதிகாரம் படைத்தது நாடாளுமன்றம்.( ஷரத்து -3)
- இந்திய குடியரசு, 28 மாநிலங்களையும்(02.06.2014 முதல் 29 மாநிலங்கள்) 7 யூனியன் பிரதேசங்களையும் உடையது.
- புதிய மாநிலத்தை உருவாக்கும், மாநில பரப்புகளை, எல்லைகளை, பெயர்களை மாற்றவுள்ள மசோதா, அந்த மாநிலத்திற்கு குடியரசுத் தலைவரால் அனுப்ப வேண்டும்.
- அந்த மாநிலம் தங்கள் கருத்துக்களை குடியரசுத் தலைவரால் குறிப்பிடப்பட்ட காலத்திற்குள் தெரிவிக்கலாம். ஆனால், அந்த கருத்துக்கள் குடியரசுத் தலைவரைக் கட்டுப்படுத்தாது.

<u>ஷரத்து - 4</u>:

- ஷரத்து -2 அல்லது 3-ன் படி சட்டம் இயற்றப்பட்டால்(புதிய மாநிலங்களை உருவாக்கினால்) அட்டவனை 1 மற்றும் 4 தானாக திருத்தம் பெறும்.
- இவ்வாறு இயற்றப்பட்ட சட்டம் அரசியலமைப்புச் சட்டத்திருத்தமாக கருதப்படமாட்டாது.

## <u>குடியுரிமை</u>: (<u>ஷரத்துக்கள்-5-11) (பகுதி-2</u>)

- இந்தியாவில் ஒற்றைக் குடியரிமை பின்பற்றப்படுகிறது.
- குடியுரிமை பற்றி சட்டம் இயற்றும் அதிகாரம் கொண்டது நாடாளுமன்றம் ஆகும்.
- 1955-ல் இந்திய குடியுரிமை சட்டம் இயற்றப்பட்டது.

<u>குடியுரிமை பெறும் முறைகள்</u>:

<u>இந்திய அரசியலமைப்புச் சட்டம் தொடங்கிய பொழுது (ஷரத்து -5</u>)

- இந்தியாவை உறைவிடமாக கொண்டு, இந்தியாவில் பிறந்தவராக இருந்தாலோ அல்லது அவரது பெற்றோரில் எவரேனும் ஒருவர் இந்தியாவில் பிறந்தவராகவோ





Downloaded from https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree

அல்லது இந்திய அரசியலமைப்புச் சட்டம் தொடக்கத்திற்கு உடன் முந்திய 5 ஆண்டுகளுக்கு குறையாமல் குடியிருந்து வந்தவராக இருக்க வேண்டும்.

**குடிபெயர்தல் மூலம் குடியுரிமை பெறுதல்(** ஷரத்து 6-7):

- இந்திய அரசியலமைப்புச் சட்டம் தொடங்கும் பொழுது பாகிஸ்தானிலிருந்து இந்தியாவிற்கு குடிபெயர்ந்து வந்தவர்களும் இந்திய குடிமக்களாவர்.
- தற்போது பாகிஸ்தானுடன் உள்ளடக்கிய பரப்பிடத்திலிருந்து குடிபெயர்ந்து வந்தவர்களும் குடிமக்களாக கருதப்படுவர்.

**பதிவு செய்துகொள்ளல் மூலம் குடியுரிமை பெறல்(** ஷரத்து -8):

- ஒருவர் தாமோ அல்லது தம் பெற்றோரில் ஒருவரோ அல்லது தம் பெற்றோரின் பெற்றோரில் ஒருவரோ 1935-ம் ஆண்டின் இந்திய அரசாங்க சட்டத்தில் வரையறுக்கப்பட்டபடி இந்தியாவில் பிறந்து, இந்திய எல்லைக்கு அப்பால் உள்ள வெளிநாட்டில் வழக்கமாக குடியிருந்து வருபவராக இருந்தால் இந்தியக் குடிமகனாக கருதப்படுவார்.

**இந்தியக் குடியுரிமை இழத்தல் (ஷரத்து -9):**

- வெளிநாட்டு குடியுரிமையைப் பெற்றால் அவர் இந்தியக் குடியுரிமையை இழந்தவாராகிறார்.

**ஷரத்து -11:**

- குடியுரிமையை ஒழுங்குப்படுத்த சட்டமியற்றும் அதிகாரம் பெற்றது நாடாளுமன்றம் ஆகும். இதன்படி இந்திய குடியரிமைச்சட்டம் -1955 இயற்றப்பட்டது.

**இந்தியக் குடியுரிமைச் சட்டம்-1955:**

- இச்சட்டம் இந்திய அரசியலமைப்புச் சட்டம் தொடங்கிய பின்னர் குடியுரிமை பற்றி வகைமுறைப்படுத்துகிறது.
  1. பிறப்பால் குடியுரிமை பெறல்.
  2. மரபுவழித் தோன்றலினால் குடியுரிமை பெறல்.
  3. பதிவு செய்துகொள்ளல் மூலம் குடியுரிமையைப் பெறல்
  4. வெளிநாட்டவர் ஒருவர் தன்னைக் குடிமகனாகக் கோரல் மூலம் குடியுரிமைப் பெறல்.
  5. எல்லையைக் கட்டியணைத்துக் கொள்வதன் மூலம் குடியுரிமை பெறல்.

**குடியுரிமை முடிவு:**

1. இந்தியக் குடியுரிமையைத் துறுத்தல் மூலம்.
2. வேறொரு நாட்டின் குடியுரிமையை அடைதல்.
3. குடியுரிமையை இழக்கச் செய்வதன் மூலம்.

## அடிப்படை உரிமைகள்

**(ஷரத்து 12லிருந்து 35 வரை பகுதி –III )**

- சமத்துவ உரிமை (ஷரத்துகள் 14-18)
- சுதந்திர உரிமை (ஷரத்துகள் 19-22)
- சுரண்டலுக்கெதிரான உரிமை (ஷரத்துகள் 23-24)
- சமய சுதந்திர உரிமை (ஷரத்துகள் 25-28)
- கலாச்சார மற்றும் கல்வியில் உரிமைகள் (ஷரத்துகள் 29-30)
- அரசியலமைப்பு தீர்வழிகள் பெற உரிமை (ஷரத்துகள் 32-35)





Downloaded from https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree

- இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் அடிப்படை உரிமைகள் அமைக்கப்பட்டதன் நோக்கமே சட்டத்தின் ஆட்சி நடைபெற வேண்டும்.
- இந்திய அரசியலமைப்பில், **நீதிப்புனராய்வு** அதிகாரம் பற்றி 13, 32, 226 போன்ற ஷரத்துகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.
- **ஷரத்து 13** அடிப்படை உரிமைகளுக்கு முரணாக உள்ள சட்டங்கள் ( all laws that are inconsistent) அனைத்தும் இல்லாத நிலையென இப்பிரிவன் மூலம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. அதாவது உயர் நீதி மன்றங்கள் மற்றும் உச்ச நீதிமன்றத்தில் நீதிப்புனராய்வு (judicial review) செய்வதற்கு வகை செய்கிறது.
- **ஷரத்து 14** "சட்டத்தின் முன் சமத்துவம்" மற்றும் "சட்டங்களின் மூலம் சம பாதுகாப்பு" என்ற இரு சொற்றொடர்களும், நீதியின் ஆட்சியையும் சமநீதியையும் குறிக்கின்றன. "சட்டத்தின்முன் சமத்துவம்" என்பதில் ஒருமையில் பயன்படுத்தப்பட்டுள்ள "சட்டம்" என்பது டைசி என்பவர் குறிப்பிட்ட நீதியின் ஆட்சி அல்லது சட்டக் கோட்பாடு அல்லது நீதிக் கோட்பாடு என்பதையே குறிக்கும்.
- **ஷரத்து 15** சாதி, சமய, இன பால் பிறப்பிட வேறுபாடுகளினால் பாரபட்சம் காட்டாமை.
- **ஷரத்து 16** சாதி, சமய, இன பால். வம்சாவழி பிறப்பிட. இருப்பிட வேறுபாடுகளினால் மட்டும் அரசுப்பதவியை அல்லது வேலையைப் பெறத் தகுதி இல்லை என்று எந்தத் குடிமகனுக்கும் பாரபட்சம் காட்டக்கூடாது.
- 1992ம் ஆண்டு நவம்பர் 16ம் தேதி மண்டல் கமிஷன் பரிந்துரையின்படி சமூகநீதியாகவும், பொருளாதார நீதியாகவும் பின்தங்கிய பிரிவினருக்கு 27 விழுக்காடு இடஒதுக்கீடு கொடுக்கப்பட்டது.
- **ஷரத்து 17** தீண்டாமை ஒழிப்பு தீண்டாமைச் சட்டம் 1955. பின்னர் இதனையே சிவில் உரிமைகள் பாதுகாப்புச் சட்டம் என 1976ல் மாற்றப்பட்டது.
- **ஷரத்து 18** 'பட்டங்கள் ஒழிப்பு' எனினும் ராணுவத்திலும் கல்வித் துறையிலும் சாதனை புரிவோருக்குப் பட்டங்கள் வழங்குவதற்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது.
- **ஷரத்து 19** சுதந்திர உரிமை
  - (a) பேச்சு மற்றும் கருத்து வெளிப்பாட்டு சுதந்திரம்
  - (b) ஆயுதங்கள் இல்லாமல் அமைதியாகக் கூட்டம் கூடுவதற்குச் சுதந்திரம்
  - (c) சங்கங்கள் அமைப்பதற்குச் சுதந்திரம்
  - (d) இந்திய ஆட்சிப்பகுதிக்குள் எல்லா இடங்களுக்கும் போய் வருவதற்கான சுதந்திரம்
  - (e) இந்தியாவின் எந்தப் பகுதியில் வேண்டுமானாலும் வசிக்கவும் குடியிருப்பதற்கும் சுதந்திரம்
  - (f) எந்தத் தொழிலையோ, வியாபாரத்தையோ, வாணிகத்தையோ மேற்கொள்வதற்கான சுதந்திரம்.
- 1978 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட 44வது அரசியல் சட்ட திருத்தத்திற்கு முன்பு சொத்துரிமையானது ஷரத்து 31ன் கீழ் ஒரு அடிப்படை உரிமையாக இருந்தது. இதனால் சிக்கல்கள் பல எழுந்ததால். 44வது இருந்த சொத்துரிமை, ஷரத்து 300ன் கீழ் சாதராண உரிமையாக்கப்பட்டது. ஷரத்து 31 நீக்கம் செய்யப்பட்டது.
- **ஷரத்து 20:** குற்றங்களுக்குத் தண்டனையளிப்பது குறித்த பாதுகாப்பு இந்தியப் பிரிவு மிக முக்கியமானதாகக் கருதப்படுகிறது. ஏனெனில் **அவசர நிலையின் போதும்கூட பிரிவு 359ன்படி ஓர் ஆணை மூலம் இந்த உரிமையை நிறுத்திவைக்க முடியாது** என்று அரசியலமைப்பின் 42வது திருத்தச் சட்டம் கூறுகின்றது.
- **ஷரத்து 21** உயிருக்கும் தனிப்பட்ட சுதந்திரமான பாதுகாப்பு: சட்டத்தினால் நிர்ணயிக்கப்பட்டுள்ள முறைப்படி அல்லாமல் எந்த ஒரு நபரின் உயிரையும் தனிச் சுதந்திரத்தையும் பறிக்க முடியாது என்று அரசியலமைப்பின் 21ஆவது



Downloaded from https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree

பிரிவு உத்தரவாதமளிக்கிறது. இதுவும் **அவசர நிலையின்போதும்கூட பிரிவு 359ன்படி ஓர் ஆணை மூலம் இந்த உரிமையை நிறுத்திவைக்க முடியாது** என்று அரசியலமைப்பின் 42வது திருத்தச் சட்டம் கூறுகிறது.

- **<u>ஷரத்து 22</u>** தடுப்புக்காவல் சட்டம். ஆலோசனைக்குழு போதுமான காரணம் இருப்பதாகக் கூறினால் ஒழிய எந்தச் சட்டத்தின் படியும் தடுப்பு மூன்று மாதங்களுக்கு மேல் போக அனுமதிக்கக்கூடாது. அத்துடன் தடுப்புக் காவலுக்கு வகைசெய்யும் எந்தச் சட்டமானாலும் அதிகபட்சம் எவ்வளவு காலத்திற்குத் தடுப்புக் காவலில் வைக்கலாம் என்பதையும் கண்டிப்பாகக் கூறியாக வேண்டும்.
- **<u>ஷரத்து 23</u>** சுரண்டலுக்கு எதிரான பாதுகாப்பு சட்டவிரோதனமாக மனிதர்களை வியாபாரம் செய்வது 'பெகர்'(Beggar) நிர்ப்பந்தப்படுத்தி வேலை வாங்குவது போன்ற சுரண்டல்களில் இருந்து பாதுகாப்பு அளிக்கிறது.
- **<u>ஷரத்து 24</u>** 14 வயதுக்கு உட்பட்ட சிறுவர்களைத் தொழிற்சாலைகளிலோ, சுரங்கங்களிலோ பிற அபாயகரமான தொழில்களிலோ வேலைக்கு அமர்த்துவதைத் தடை செய்கிறது.
- **<u>ஷரத்து 25</u>** குடிமக்கள் எவ்விதக் கட்டுபாடும் இன்றி எந்தச் சமயத்தையும் ஏற்கவும் பின்பற்றவும் பரப்பவும் அனைவருக்கும் சுதந்திரம் உண்டு.
- **<u>ஷரத்து 26</u>** எல்லா சமயத்தவருக்கும், சமயப் பிரிவினருக்கும் சமய மற்றும் அறநிலைய அமைப்புகளை ஏற்படுத்திப் பராமரிக்க சமயம் சம்பந்தப்பட்ட விஷயங்களைத் தாமே நிர்வகித்துக் கொள்ள சொத்துக்களை வாங்கி நிர்வகிக்கத் தேவையான அடிப்படை உரிமையை அளிக்கிறது.
- **<u>ஷரத்து 27</u>** எந்த ஒரு குறிப்பிட்ட சமயத்தின் வளர்ச்சிக்காவும் பராமரிப்பிற்காகவும் ஆகும் செலவுகளுக்காக வரி செலுத்துமாறு எந்த ஒரு நபரையும் கட்டாயப்படுத்த முடியாது.
- **<u>ஷரத்து 28</u>** முற்றிலும் அரசாங்க நிதியில் செயல்படும் கல்வி நிறுவனங்களில் சமய போதனை கூடாது என்று கூறுகிறது.
- **<u>ஷரத்து 29</u>** இந்தியாவின் எந்தப் பகுதியிலேனும் வசிக்கின்ற குடிமக்களின் எந்த ஒரு பிரிவினரும் தமக்கென்று பிரத்யோகமான மொழியையோ, எழுத்து வடிவத்தையோ பண்பாட்டையோ கொண்டவர்களாக இருந்தால் அவற்றைப் பேணிக்காக்கும் உரிமை அவர்களுக்கு உண்டு.
- **<u>ஷரத்து 30</u>** சிறுபான்மையினர் அனைவரும் அவர்கள் சமயச் சிறுபான்மையினரானாலும் மொழிச் சிறுபான்மையினரானாலும் அவர்கள் விருப்பத்திற்கு ஏற்ப கல்வி நிறுவனங்களை உருவாக்கி நிர்வகிப்பதற்கு உரிமையுண்டு.
- **<u>ஷரத்து 32</u>**
  - நீதிப்போராணை வேண்டும் மனுவை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாம். ஒரு நபர் நேரடியாக உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாம்.
  - அரசியலமைப்பின் 3வது பகுதியில் உத்திரவாதமளிக்கப்பட்டுள்ளன அடிப்படை உரிமைகள் மீறப்படும் பொழுது உச்ச நீதிமன்றம் நீதிப்போராணை வெளியிட அதிகாரம் படைத்துள்ளது.
- **ஆட்கொண்ர்விக்கும் நீதிப்போராணை**: சட்டத்திற்குப் புறம்பான முறையில் சிறைப்பிடித்து வைக்கப்பட்டவரை விடுவிக்கச் செய்ய இவ்வாணை இடப்படுகிறது.
- **செயலுறுத்தும் நீதிப்போராணை**: பொதுக்கடமையான ஒரு செயலை ஓர் அதிகாரி அல்லது கூட்டமைப்பு அல்லது கீழ் நீதிமன்றம் செய்யத் தவறினால் அக்கடமையைச் செய்ய இவ்வாணை இடப்படுகிறது.
- **தடையுறுத்தும் நீதிப்போராணை**: கீழ் நீதிமன்றமோ, ஆட்சி அதிகாரியோ தம் அதிகார வரம்பை மீறி அல்லது சட்ட முரணாக ஏதேனும் நடவடிக்கை எடுத்தால் அதை மேற்கொண்டு நடத்தாமல் செய்ய இவ்வாணை இடப்படுகிறது.
- **நெறிமுறையுறுத்தும் நீதிப்போராணை:** நீதிமுறை சார்ந்த அலுவல்களைச் செய்யும் தீர்ப்பாயங்கள் அதிகாரிகள் தம் அதிகார வரம்பை மீறி செயல்பட்டாலோ அறமுறைக்கு மாறாக நடவடிக்கை எடுத்தாலோ அவற்றை



Downloaded from https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree

மறு ஆய்வு செய்து நீக்கம் செய்வதற்கென அவை சம்பந்தமான ஆவணங்களைத் தமக்கு அனுப்புமாறு நீதிமன்றம் ஆணையிடுவதுதான் நெறிமுறையுறுத்தும் நீதிப்போராணை ஆகும்.

- **தகுதிமுறை வினவும் நீதிப்போராணை**: பொது அதிகாரப் பதவியில் உள்ளவரை அவர் எத்தகுதியில் அப்பதவி வகிக்கிறார் என்ற வினவி, பிறப்பிக்கப்படும் ஆணைதான் தகுதிமுறை வினவும் நீதிப்போராணை ஆகும்.

**ஷரத்து 226க்கும் மற்றும் ஷரத்து 32க்கும் உள்ள ஒற்றுமை:**

- உயர்நீதிமன்றம் நீதிப்போராணையைப் பிறப்பிக்கும் (226) உச்ச நீதிமன்றம் நீதிப்போராணையைப் பிறப்பிக்கும் (32)
- உயர் நீதிமன்றத்தில் வழக்கிடுவது அடிப்படை உரிமையில்லை, சாதாரண உரிமையே. உச்ச நீதிமன்றத்தில் வழக்கிடுவது அடிப்படை உரிமையாகும்.
- ஷரத்து 226ல் தீர்வழி கேட்கும் உரிமையை நெருக்கடி நிலைமை பிரகடனப்படுத்தப்படும் பொழுது நிறுத்தி வைக்கப்பட முடியாது. ஆனால் ஷரத்து 32ல் நிறுத்தி வைக்கப்படும்.
- அடிப்படை உரிமை மீறப்பட்டதற்கு மாற்று தீர்வழி இருப்பின் ஒரு உயர் நீதிமன்றம் நீதிப்போராணையை பிறப்பிக்காது அடிப்படை உரிமை மீறப்பட்டதற்கு தீர்வழி இருப்பினும் உச்ச நீதிமன்றம் நீதிப் போராணையைப் பிறப்பிக்கும். ஏனெனில் இது ஒரு அடிப்படை உரிமையாகும்.
- அடிப்படை உரிமையைத் தவிர சாதாரண உரிமைகள் மீறப்பட்டாலும் உயர் நீதிமன்றம் நீதிப்போராணையைப் பிறப்பிக்கும்.

## பகுதி – III- க்கு வெளியேயான உரிமைகள் : (Rights Outside Part III)

பகுதி – III –ல் உள்ள அடிப்படை உரிமைகளுடன் அரசியலமைப்பின் மற்ற சில உரிமைகள் வழங்கப்பட்டுள்ளன. இவ்வுரிமைகள் அரசியலமைப்பு உரிமைகள் அல்லது சட்டப்பூர்வமான உரிமைக் ளஅல்லது அடிப்படை உரிமைகள் அல்லாதவை அவைகள்.

- பகுதி – XII –ல் ஷரத்து 265:- (Article 265 in Part XII) சட்டப்பூர்வமல்லாத வழிகளில் வரியை விதித்தல் அல்லது வசூலித்தல் ஆகாது.
- பகுதி – XII –ல் ஷரத்து **300** A (Article 300 A in Part XII) சட்டப்பூர்வத்தின் வழியில்லாமல் எவரிடமிருந்தும் சொத்து பறிக்கப்படுதல் ஆகாது.
- பகுதி – XIII –ல் ஷரத்து **301**:- (Article 301 in Part XIII) இந்திய நிலவரைக்குள், வணிகம், வாணிபம் தொடர்புறவுகள் ஆகியவற்றிற்கு தடையில்லை
- பகுதி – XV –ல் ஷரத்து 326:- (Article 326 in Part XV) மக்களவைக்கும் மாநிலங்களின் சட்டமன்ற பேலவைகளுக்குமான தேர்தல்கள் வயதுவந்தோருக்கு வாக்குரிமை என்ற அடிப்படையில் இருக்கும்.
- மேலே குறிப்பிட்டுள்ள உரிமைகளுக்கு **நீதிமன்றம் மூலம் சமமான தீர்வு காண முடியும். எனினும் அவை அடிப்படை உரிமைகளிலிருந்து மாறுபட்டவை.**

## அரசு நெறிமுறையுறுத்தும் கொள்கைகள்
## (பகுதி IV ஷரத்து 36-51)

**சமத்துவ கோட்பாடுகள் (Socialistic Principals):**

- **ஷரத்து 38:** பொது நல அரசில் மக்களுக்கு சமூக, அரசியல் மற்றும் பொருளதார நீதி வழங்கப்படுவதை உறுதி செய்தலும் (Securing a social order) மற்றும்




Downloaded from https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree

மக்களுக்கு இடையேயுள்ள வருமானம், தகுதி, வசதி மற்றும் வாய்ப்புகளில் உள்ள வேறுபாடுகளை குறைத்தலும் ஆகும்.

- **ஷரத்து 39:**
  - குடிமகனின் வாழ்விற்கு தேவையான அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்தலும் (Adequate means of livelihood)
  - வள ஆதராங்களை சமமான முறையில் பிரித்தளித்தலும்.
  - ஒரே இடத்தில் வளங்கள் குவிக்கப்படுதலை தடுத்தலும்
  - ஆண், பெண் என வேறுபாடின்றி செய்த வேலைக்கு சம ஊதியம் வழங்கலும்.
  - தொழிலாளர்களை கட்டாயப்படுத்தி வேலைக்கு அமர்த்தப்படுவதைத் தடுத்தலும்.
  - குழந்தைகளை நலமான, வளமான முறையில்வெ வளர்ப்பதற்கான வாய்ப்புகளை அளிப்பதும் இவைகள் குறித்து பாதுகாப்பு வழங்குதலும்.

- **ஷரத்து 39A :**அனைவருக்கும் சமநீதி வழங்குவதும் தேவைப்படின் நீதிமன்றத்தில் வாதாடுவதற்கு (அ) முறையிடுவதற்கான இலவச சட்ட உதவியை (free legal aid) ஏழைகளுக்கு வழங்குவதும்.
- **ஷரத்து 41:** வேலைசெய்வதற்கான உரிமை பெறுவதும், கல்விபெறும் உரிமையும்ம (Right to education) மற்றும் வேலையில்லாதோர் நிலையில், அரசு உதவித்தொகைகளை பெற உறுதி செய்தலும் ஆகும்.
- **ஷரத்து 42:** மனிதாபிமான அடிப்படையிலான பணி சூழலும் மற்றும் மகப்வேறு தேவையான உதவிகளும் (maternity relief)
- **ஷரத்து 43 :** தொழிலாளர்களுக்கான வாழ்வதாராரம் கூலி, முறையபான தரமான வாழ்க்கைக்குத் தேவையான வசதிகளை செய்து தருதலும்.
- **ஷரத்து 43 A:** தொழிற்சாலைகள் நிர்வாகத்தில் தொழிலாளர்களை பங்க கொள்ள வழிவகை செய்ய வேண்டும்.
- **ஷரத்து 47 :** ஊட்டசத்து மற்றும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தலும் மற்றும் பொது சுகாதாரத்தை மேம்படுத்துவதும் ஆகும்.

## காந்தியக் கோட்பாடுகள் :- (Gandhian Principles):

- **ஷரத்து 40 :** கிராம பஞ்சாயத்துகளை முறைப்படுத்தவும், சட்டப்படி அதிகாரம் வழங்கவும் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளான பொறுப்புகளை வழங்குவது ஆகும்.
- **ஷரத்து 43 :**கிராமப்புறங்களில் சுயதொழில், குடிசைத்தொழில் மற்றும் கூட்டுறவு முறையில் தொழிற்முயற்சிகளை ஊக்கு விக்க வழிசெய்கிறது.
- **ஷரத்து 43B** :கூட்டுறவு சங்கங்கள் தாமாகவே முன்வந்து தொழிற்சார்ந்த மேலாண்ரமையை ஏற்படுதுதல், சுயேட்சையாக செயல்படுதல், அதற்கென சில உரிமைகள், சுதந்திரம அளித்தலை பற்றி இது கூறுகிறது.
- **ஷரத்து 46 :** சமூகத்தின், ஆதிதிராவிடர் பழங்குடியினர் மற்றும் நலிந்த பிரிவினருக்கு பொருளாதரத்தில் மேம்பட உதவுவதும், சமுதாயத்தில் அவர்களுக்கு எதிராக நடைபெறும் செயல்களை தண்டித்து நீதி வழங்கலும், அவர்களை பாதுகாத்தலும்.



Downloaded from https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree

- **ஷரத்து 47 :** ஊடல் நலத்திற்கு தீங்குதரும் மது மற்றும் புகைப்பழக்கத்துக்கு தடைவிதித்தல்.
- **ஷரத்து 48 :**கால்நடை விலங்குகளை பலியிடுதலை தடுத்தலும், கால்நடை வளர்ப்பு பற்றி விழிப்புணர்வு உண்டாகுதல் பற்றியும் கூறுகிறது.

## பரந்த (அ) வள்ளன்மை கோட்பாடுகள் (Liberal –Intellectual Principles):

- **ஷரத்து 44 :** அனைவருக்கும் (அதாவது நாடு முழுவதற்குமே) ஒரே மாதிரியான "பொது சட்டதொகுப்பை" (Uniform civil code) குடிமக்கள் பெறுவதை உறுதிசெய்கிறது.
- **ஷரத்து 45:** குழந்தைகளுக்கு 6 வயது ஆகும் காலம் வரை அவர்கள் கல்வி பெறுவதை உறுதி செய்தலும் ஆரம்ப கால குழந்தை மருத்துதுதத்திற்கான அக்கறை காட்டுதலும்.
- **ஷரத்து 48 :**நவீன மற்றும் அறிவியல் தொழில் நுட்பத்தைக் கொண்டு விவசாயம் மற்றும் விலங்கு வளர்ப்புகளை ஒருங்கிணைத்தல்.
- **ஷரத்து 48 A :**சுற்றுசுழலை பாதுகாத்தலும், காடுகள் மற்றும் அதன் உயிர் இனங்கள் (Wild life) பராமரித்தலையும் குறிக்கிறது.
- **ஷரத்து 49 :**பாரம்பரிய இடங்கள் மற்றும் நினைவு சின்னங்கள் அல்லது வரலாற்று முக்கித்துவம் வாய்ந்த தேசிய நினைவுச்சின்னங்களை பாதுகாத்தலும் ஆகும்.
- **ஷரத்து 50 :** நீதித்துறையை அரசின் செயலாக்க துறையில் இருந்து பிரித்தல் (Seperation of Judiciary from excutive)
- **ஷரத்து 51 :**பன்னாட்டு உறவுகளிடையே அமைதி மற்றும் பாதுகாப்பை மேற்கொள்ளுதலும் சுமூக உறவுகளை மேம்படுத்தவும், கூட்டிணைவு முயற்சிகளையும், ஒப்பந்தங்கள் செயல்படுத்துதல் பற்றியும் கூறுகிறது.

## புதிய நெறிமுறைக் கோட்பாடுகள் ( New Directive Principles):

- **42வது சட்டதிருத்தப்படி** (The 42nd Amendment Act of 1976) **4 புதிய கோட்பாடுகள் சேர்க்கப்பட்டுள்ளன**
    - **ஷரத்து 39–** குழந்தைகளை வளமான முறையில் வளர்வதற்கான வாய்ப்புகளை உறுதி செய்தல்.
    - **ஷரத்து 39 A –** சமூகத்தில் அனைவருக்கும் சமநீதி கிடைக்க வழிசெய்தல் மற்றும் ஏழைகளுட்கு இலவச சட்ட உதவி அளித்தல்.
    - **ஷரத்து 43 A –** தொழிற்சாலைகள் நிர்வாகத்தில் தொழிலாளர்களின் பங்களிப்பை உறுதி செய்தல்.
    - **ஷரத்து 48 A –** சுற்றுசூழல், காடுகள் மற்றும் வனவிலங்குகளின் மீது பாதுகாப்பு, விழிபுணர்வு ஏற்படுத்தல்.
- **44 வது சட்டத்திருத்தம் 1978–ல்** நெறிமுறைக் கோட்பாடுகளில் சேர்க்கப்பட்ட **ஷரத்து 38** வருவாய், தகுதி, வசதிகள் மற்றும் வாய்ப்புகளில் உள்ள ஏற்றத் தாழ்வுகளை குறைக்க அரசுக்கு பொறுப்பளித்தது.
- **86 வது சட்டதிருத்தம் 2002–ன்** மூலம் **ஷரத்து 45–ல் அளிக்கப்பட்ட பொருண்மையை மாற்றியமைத்து** மற்றும் ஷரத்து 21–A யில் தொடக்கக்கல்வி என்பது அடிப்படை உரிமையாகும் (elementary education a fundamental right) என்றும் வழங்கியது. இத்திருத்தம் மூலம அரசு ஆரம்ப கால குழந்தை



Downloaded from https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree

வளர்ப்பு நலனில் அக்கறைகொள்வதம் **6** வயத குழந்தைகளுக்கு கல்வி அளிப்பதும் உறுதி செய்யப்பட்டுள்ளது.

- கூட்டுறவு சங்கங்களின் தன்னிச்சையாக செயல்படவும் தொழில்சார்ந்த மேலாண்மையை ஏற்படுத்தவும் **97 வது சட்டத் திருத்தம் 2011**–ன் மூலம் சேர்ககப்பட்ட **ஷரத்து 43 B** வழிவகை செய்கிறது.

**<u>அடிப்படை உரிமைகளுக்கு நெறிமுறை கோட்பாடுகளுக்கும் உள்ள வேறுபாடுகள்</u>**

**<u>(Differences Between Fundamental Rights and DPSP)</u>**

| அடிப்படை உரிமைகள் | நெறிமுறை கோட்பாடுகள். |
|---|---|
| அரசு மக்களுக்கு எதிராக செயல்படாமல் இருக்கும்படி (எதிர்மறையாக) பார்த்துக்கொள்கிறது. | இவை நேர்மறையானவை. அரசு மக்களுக்கு நலன்கள் செய்ய வழிவகுக்கிறது. |
| நீதிமன்ற அதிகாரத்திற்கு உட்பட்டது. இவை மீறினாலோ (அ) மறுக்கபட்டாலோ சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும். | பின்பற்றாத (அ) கடைபிடிக்காத காரணங்களக்காக தண்டிக்கப்பட இயலாது. நீதிமன்ற எல்லைக்கு உட்படாதது. |
| நாட்டில் அரசியல் ஜனநாயகத்தை ஏற்படுத்துவது இதன் குறிக்கோளாகும். | சமூக, பொருளாதார ஜனநாயகத்தை ஏற்படுத்துவதை குறிக்கோளாக கொண்டுள்ளது. |
| இதற்கு சட்டப்படி ஒப்புதல் உண்டு | இதற்கு ஒழுக்க தத்துவங்கள் மற்றும் ஜனநாயக ஒப்புதல்கள் உண்டு |
| இது தனி மனித நலநன ஊக்குவிக்கிறது | இது ஒரு குறிப்பிட்ட பகுதியின் மக்களின் நலநன ஊக்குவிக்கிறது. |
| இவற்றை செயல்படுத்துவதற்காக தனிச்சட்டம் இயற்ற தேவையில்லை | இவற்றை செயல்படுத்துவதற்க சிறப்பு (அ) தனிச்சட்டங்கள் இயற்றப்பட வேண்டும். |
| அடிப்படை உரிமைகளுக்கு எதிராக சட்டம் இயற்றும் போது அது விதி மீறல் எனக்கூறி அதனை நிராகரித்தலுக்குரிய கடமை நீதி மன்றத்திற்கு உரியது. | இங்கு விதி மீறல்கள் (அ) பிற காரணம் கூறி சட்டம் செல்லாது என அறிவிக்க இயலாது மாறாக எதன் அடிப்படையில்வெ இச்சட்டம் இயற்றப்படுகிறது என்று கூறி அதனை வலிமைப்படுத்தலாம். |

**<u>பகுதி IV –க்கு வெளியேள்ள நெறிமுறைகள் (Directives Outside part IV)</u>**

- **பகுதி XVI ஷரத்து 335** (Article 335 in Part XVI) நிர்வாகத்தின் சீர்மையான செயல்பாட்டிற்கும், மத்திய மாநில அரசுகளில் பழங்குடியினர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர்களை நியமித்து அவர்களின் கோரிக்கைகளை கேட்டு, உரிமைகளை பெறசெய்வது பற்றி கூறுகிறது.
- **ஷரத்து 350 A – பகுதி XVII:** (Article 350-A in Part XVII) ஒவ்வொரு மாநில அரசிற்கும் உள்ளாட்சி அமைப்புகளுக்கும் ஒரு முக்கிய கடமையாக இருப்பது மொழிவாரி சிறுபான்மையினரின் குழந்தைகள் தங்களது தாய்மொழியில் கல்வி பெறுவதற்கு தேவையான வசதிகளை உருவாக்கி தருவதற்கு வழிவகை செய்கின்றது.



Downloaded from https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree

- **பகுதி XVII ஷரத்து 351:** இந்தி மொழியை ஊக்குவிப்பதும் அதனை பொதுமொழியாக இந்தியா முழுவதும் செயல்படுத்துவது மத்திய அரசின் பொறுப்பாகும்.

## <u>அடிப்படைக் கடமைகள்</u> ( Fundamental duties)
## (Part – IV-A)

- 1976ஆம் ஆண்டின் அரசியலமைப்பு திருத்தச் (42வது திருத்தம்) சட்டமானது, இந்தியக் குடிமக்களுக்கு பத்து அடிப்படைக் கடமைகளின் தொகுப்பனை அறிமுகப்படுத்தி உள்ளது.
- இதற்காக 51-A எனும் ஒரு ஷரத்தைக் கொண்ட பகுதி புதிதாக அரசியல் அமைப்பில் இணைக்கப்பட்டுள்ளது.
  a. அரசியலமைப்பினைப் பின்பற்றுதல், மற்றும் அதன் குறிக்கோள்கள், அமைப்புகள் தேசியக்கொடி மற்றும் இவற்றிற்கு மரியாதை செலுத்துதல்.
  b. நமது நாட்டு விடுதலைப் போராட்டத்தை தூண்டிய உயர்ந்த குறிக்கோள்களை பின்பற்றுதல் மற்றும் போற்றி வளர்த்தல்.
  c. இந்தியாவின் ஒற்றுமை, இறைமை மற்றும் ஒருமைப்பாட்டை நிலைநிறுத்தல் மற்றும் பாதுகாத்தல்.
  d. நாட்டினைப் பாதுகாத்தல் மற்றும் அழைக்கப்படும் பொழுது தேசியப பணிபுரிதல்
  e. சமயம், மொழி மற்றும் வட்டாரம் அல்லது பிரிவு வேறுபாடுகளைக் கடந்து இந்திய மக்களுக்குள் பொது சகோரத்துவ உணர்வு மற்றும் இணக்கத்தினை மேம்படுத்துதல் பெண்களின் மேன்மையைத் தாழ்த்துகின்ற பழக்கங்களைத் துறத்தல்
  f. நமது பல்வகையான கலாச்சாராத்தின் உயர்ந்த பாரம்பரியத்திற்கு மதிப்பு அளித்தல் மற்றும் பேணுதல்
  g. காடுகள் ஏரிகள் ஆறுகள் மற்றும் மேம்படுத்துதல் மற்றும் வாழும் உயிரினங்களுக்காக இரக்கம் கொள்ளுதல்
  h. ஆய்வறிவு விளைவு நிலை மனித நலம் மற்றும் விசாரணை உணர்வு மற்றும் சீர்திருத்தங்களை மேம்படுத்துதல்
  i. பொதுச் சொத்துக்கு பாதுகாப்பு அளித்தல்
  j. எல்லாத் துறைகளிலும் தனிமனிதன் மற்றும் கூட்டுச் செயல்பாடுகளின் முதன்மை நிலையை நோக்கி முயலுதல் மற்றும் இதனால், நாடு முயர்சியின் உயர்படி நிலை சாதனைகளை நோக்கி நிலையாக உயருகிறது.
  k. 6 முதல் 14 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு கட்டாயம் கல்வி அளிக்கப்பட வேண்டியது பெற்றோர்களின் கடமையாகும் ( 2002ல் இயற்றப்பட்ட 86வது சட்டத்திருத்தத்தின் படி)

## <u>இந்தியக் குடியரசுத் தலைவர்</u>

- ஷரத்து 52 இந்தியாவிற்கு ஒரு குடியரசுத் தலைவர் இருக்கவேண்டும் என்றும் இவர் இந்திய அரசின் தலைவராக விளங்குகிறார் என்றும் அரசாங்கத்தின் செயலாட்சி அதிகாரம் குடியரசுத் தலைவரிடம் வழங்கப்பட்டுள்ளது எனவும்,
- இவர் அவ்வதிகாரத்தை இந்திய அரசியல் அமைப்புக்குட்பட்டு நேரடியாகவோ, தனது கீழுள்ள அதிகாரிகள் மூலமாகவோ செயலுறுத்தலாம் என்று கூறுகிறது.

<u>**தகுதிகள்**</u>




Downloaded from https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree

- ஒரு இந்திய குடிமகனாகவும்
- 35 வயது நிரம்பியவராகவும்
- பாராளுமன்றத்தின் மக்கள் சபைக்குப் போட்டியிடத் தகுதி பெற்றவராகவும் இருக்க வேண்டும்.
- மத்திய அரசாங்கத்திலோ அல்லது ஏதாவதொரு மாநில அரசாங்கத்திலோ அல்லது மேற்கண்ட அரசாங்கங்களின் கீழ் இயங்கும் ஏதாவதொரு வட்டார அல்லது பிற அதிகார அமைப்பிலோ ஆதாய அடிப்படையில் அமைந்த எந்த ஒரு பதவியையும் வகிப்பவராக இருத்தல் கூடாது.
- ஊதியம்-மாதச்சம்பளம் - ரூ.1,50,000
- மேலும் வாடகை தராமல் அரசாங்க குடியிருப்பை பயன்படுத்திக்கொள்ள உரிமையுண்டு
- **தேர்ந்தெடுக்கப்படும் முறை**
  - மக்களால் நேரடியாக தேர்ந்தெடுக்கப்படுவதில்லை மாறாக அவர் ஒரு தேர்தல் குழுவின் உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார். இத்தேர்தல் குழு
    (அ) பாராளுமன்றத்தின் இரு அவைகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களையும்
    (ஆ) மாநில சட்டமன்றத்தின் கீழவையான சட்டப்பேரவையின் தேர்ந்து எடுக்கப்பட்ட உறுப்பினர்களையும் உள்ளடக்கியதாகும். இவ்வாறு **ஷரத்து 54 கூறுகிறது.**
  - இத்தேர்தல் குழுவினரால் குடியரசுத் தலைவரைத் தேர்ந்தெடுக்கும் போது **விகிதப் பிரதிநிதித்துவ முறை** பின்பற்றப்படும் உறுப்பினர்கள் அளிக்கும் ஓட்டு, **ஒற்றைமாற்று ஓட்டு** ஆகும்.
  - இந்தியக் குடியரசுத் தலைவர். தாம் பதவி ஏற்ற தினத்தில் இருந்து 5 ஆண்டுகள் தொடர்ந்து பதவி வகிக்கலாம். ஒருவர் எத்தனை முறை வேண்டுமானாலும் குடியரசுத் தலைவர் பதவிகத் தேர்தலுக்குப் போட்டியிடலாம்.
  - **“குடியரசுத் தலைவர் மீது பழிச்சாற்றுவது”** தொடர்பான நடைமுறைகளை **ஷரத்து 61** கூறுகிறது. குடியரசுத் தலைவர் தாமாகவே தனது பதவியை இராஜினாமா செய்யலாம் அல்லது பாராளுமன்றத்தின் ஏதாவது ஒரு அவையில் மொத்த உறுப்பினர்கள் கையொப்பமிட்ட ஒரு தீர்மானத்தின் நகல் குடியரசுத் தலைவருக்கு அது தொடங்கப்படும் 14 நாட்களுக்கு முன்பாகவே கொடுக்கப்பட வேண்டும். பிறகு அத்தீர்மானம் சபையின் மொத்த உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்குக்குக் குறையாத உறுப்பினர்களால் ஆதரிக்கப்பட்டு நிறைவேற்றப்பட வேண்டும்.
- குடியரசுத் தலைவரின் அதிகாரங்களை பற்றி **ஷரத்து 109** கூறுகிறது

## <u>செயலாட்சித் துறை அதிகாரங்கள்</u>

- உச்ச மற்றும் உயர் நீதிமன்ற நீதிபதிகள் மாநிலங்களில் ஆளுநர்கள் அட்டார்னி ஜெனரல். தணிக்கைத் தலைவர், பொதுப் பணிக்குழுவின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள். தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர்களுக்குண்டான தனி அலுவலர்கள், தாழ்த்தப்பட்ட பகுதியின் விவரத்தை தயார் செய்யும் குழு பிற்பட்டோர் நிலையை ஆயும் குழு மற்றும் மொழி வாரி சிறுபான்மையினோருக்கு தனி அலுவலர் இவர்களை நியமிக்கும் அதிகாரத்தை குடியரசு தலைவர் பெற்றுள்ளார்.

### <u>இராணுவ அதிகாரங்கள்</u>

- முப்படைகளின் தலைவர் ஜனாதிபதியாவார்
- போர் (அ) அமைதியை அறிவிப்பவர் ஜனாதிபதியாவார்

### <u>சட்டமன்றத்துறை அதிகாரங்கள்</u>



Downloaded from https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree

- பாராளுமன்றத்தின் அவைக் கூட்டங்களைப் பொறுத்த வரையில் அவைகளைக் கூட்டும் அதிகாரமும். ஒத்திவைக்கும் அதிகாரமும் அளிக்கப்பட்டுள்ளது.
- மேலவையான மாநிலங்களவையைக் (ராஜ்ய சபை) கலைக்கும் அதிகாரம் குடியரசுத் தலைவருக்கு கொடுக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.
- மேலும் குடியரசு தலைவர் பாராளுமன்றத்தின் சபைகளில் உரை நிகழ்த்தவும். அல்லது இரு சபைகளின் கூட்டுக் கூட்டத்தில் உரை நிகழ்த்தவும் உரிமைப் பெற்று உள்ளார்.
- சபைகளுக்குச் செய்தி அனுப்பும் உரிமையையும் இவர் பெற்றுள்ளார். (ஷரத்து 86)
- மேலவையான **மாநிலங்களவைக்க 12 உறுப்பினர்களையும்,** கீழவையான **மக்களவைக்கு 2 ஆங்கிலோ இந்திய உறுப்பினர்களையும்** நியமிக்கும் அதிகாரத்தையும் பெற்றிருக்கிறார்.
- குடியரசுத் தலைவர் பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட மசோதா குறித்து தனது இசைவினை அளிக்கலாம் (ஷரத்து 111) அல்லது நிறுத்தி வைக்கலாம். அல்லது பண மசோதா தவிர சாதாரண மசோதாக்களில் தாம் குறிப்பிட்டுள்ள விபரம் குறித்து மீண்டும் மறு பரிசீலனை செய்வதற்காக அம்மசோதாவை அவைக்கே திரும்பி அனுப்பலாம். அம்மசோதா குடியரசுத் தலைவரின் யோசனைப்படி திருத்தப்பட்டோ அல்லது திருத்தப்படாமலோ மீண்டும் அவருடைய இசைவிற்கு அனுப்பப்பட்டால் குடியரசுத் தலைவர் தன்னுடைய இசைவினை அளிக்க மறுக்க முடியாது ஆனால் நிதி மசோதாக்களைக் குடியரசுத் தலைவரின் ஒப்புதல் இல்லாமல் செய்ய முடியாது.
- ஒரு சாதாரண மசோதா குறித்து பாராளுமன்றத்தின் இரு அவைகளுக்கு இடையே முரண்பாடு எழுமேயாயின் அதனைத் தீர்த்து வைக்க. இரு அவைகளின் கூட்டு கூட்டத்திற்கு ஏற்பாடு செய்ய குடியரசுத் தலைவருக்கு அதிகாரம் உண்டு. (ஷரத்து 108).
- **அவசர கால சட்டம்** பிறப்பிக்கும் அதிகாரம் (Ordinance ) ஷரத்து 124
- குடியரசு தலைவர் பிறப்பிக்கும் **அவசர கால சட்டம்** பாராளுமன்றத்தின் **மக்களவை** முன்போ. இரு அவைகள் இருப்பின் இரு அவைகளின் முன்போ குடியரசு தலைவரால் அவைகள் கூடும்போது சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
- பாராளுமன்றம் கூடிய தேதியிலிருந்து ஆறு வாரங்கள் வரை இந்த **அவசர கால சட்டங்கள்** அமலில் இருக்கும். இக்காலக்கெடுவிற்கு முன்பாகவே. பாராளுமன்ற அவை மேற்படி **சட்டத்தை** ஒரு தீர்மானம் வாயிலாக நிராகரித்தால் தீர்மானம் நிறைவேறிய தேதியிலிருந்து **அச்சட்டம்** செல்லும்படி ஆகாது.
- குடியரசு தலைவர் பிறப்பித்த **அவசர கால சட்டத்தை** ஆறு வாரங்களுக்குள் அவராகவே திரும்பப் பெற்றுக்கொள்ளலாம்.

**துணைக் குடியரசுத்தலைவர்**

- இரு அவைகளின் இரகசிய வாக்கெடுப்பின் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகிறார்.
- தகுதிகள்:
- இந்தியக்குடிமகனாக இருக்கவேண்டும்.
- 35 வயது நிரம்பியவராக இருக்க வேண்டும்.
- ஆதாயம் தரும் பதவியில் இருக்கக் கூடாது

குடியரசுத்தலைவரின் பதவி காலியாகும் பட்சத்தில் அவரின் பணியை 6மாதகாலத்திற்கு மேற்கொள்கிறாா

**இந்திய அரசுத் தலைமை வழக்கறிஞர்**

- அரசாங்கத்திற்கு சட்ட சம்பந்தமான விஷயங்களை ஆலோசனை வழங்கவும் சட்ட சம்பந்தமான இடப்படும் பிற பணிகளை செய்யவும் உச்சநீதிமன்ற நீதிபதி





Downloaded from https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree

ஆக நியமிக்கப்படுவதற்கான தகுதிகளை உடைய ஒருவரை இந்தியாவின் தலைமை வழக்கறிஞராக குடியரசுத் தலைவரால் நியமிக்கப்படுகிறார். (ஷரத்து 76)

- குடியரசுத் தலைவர் விரும்பும்வரை ஆலோசனையின் பேரிலேயே அவர் நியமிக்கப்படுவதால் ஆட்சி மாறியவுடன் அட்டர்னி – ஜெனரலும் பதவி விலகுவது ஒரு மரபாக உருவாக்கிவிட்டது.

- இந்தியாவின் உள்ள நீதிமன்றங்கள் அனைத்திலும் முதலில் தன்னுடைய கருத்தைக் கேட்குமாறு கூறும் உரிமை அவருக்கு உண்டு.
- நாடாளுமன்றத்தின் இரண்டு அவைகளிலுமே கூட்டத்தொடரின் நடவடிக்கைகளில் பங்கு கொண்டு பேசுகின்ற உரிமையும் அவருக்கு உண்டு எனினும் தீர்மானங்களின்மீது வாக்களிக்கும் உரிமை கிடையாது.

## பிரதம மந்திரி மற்றும் மத்திய அமைச்சரவை

- ஷரத்து 74 மற்றும் 75 'அமைச்சரவை' என்ற தலைப்பில் கீழ் அமைச்சரவையின் அமைப்பு கொள்கை பற்றித் தெரிவிக்கிறது. பிரதம மந்திரியைத் தலைவராகக் கொண்டு ஓர் அமைச்சரவை, இந்தியக் குடியரசுத் தலைவருக்கு உதவியும் மற்றும் ஆலோசனையும் அளிக்கும் பொருட்டு இருத்தல் வேண்டும் என கூறுகிறது. இந்தியக் குடியரசுத் தலைவர் இந்தியாவின் பிரதம மந்திரியை நியமிக்கிறார்.
- பிரதம மந்திரியின் ஆலோசனையின் பேரில் இந்தியக் குடியரசுத் தலைவர் மற்ற அமைச்சர்களை நியமனம் செய்கிறார் என ஷரத்து 75(1) தெரிவிக்கிறது. ஷரத்து 75(3) அமைச்சரவை ஒன்று இருக்க வேண்டும் அது **மக்களவைக்கு (லோக்சபா) கூட்டாக பொறுப்பு வகிக்க வேண்டும் என்று கூறுகிறது.** பாராளுமன்ற முறையில் அமைந்த அரசாங்கத்தின் அடிப்படை அஸ்திவாரமே கூட்டுப் பொறுப்புக் கொள்கை ஆகும்.

**கூடுப் பொறுப்புக் கொள்கையின் பொருள்**

- கூட்டு பொறுப்புக் கொள்கை எனப்படுவது அரசாங்கத்தின் பொது நடைமுறை விவகாரங்களுக்கு அமைச்சரவையினால் எடுக்கப்படும் தீர்மானங்கள் அதன் உறுப்பினர்களின் கூட்டுத் தீர்மனமாக கருதப்படும். அமைச்சரவையின் தீர்மானத்துடனோ அல்லது பிரதம மந்திரியுடனோ ஒரு அமைச்சர் ஒத்து செல்லவரவில்லையென்றால் அவர் தனது பதவியை இராஜினாமா செய்வதைத் தவிர வேறு வழியில்லை இதன் மூலம் பிரதம மந்திரி அமைச்சரவையின் ஒற்றுமையையும் ஒழுக்கத்தையும் கட்டிக் காக்கிறார்.

### அமைச்சரவையின் அதிகாரங்களும் பணிகளும்

- இந்திய திருநாட்டில் **செயலாட்சித் துறையின் உண்மையான தலைமையாக அமைச்சரவை அமைந்துள்ளது. இந்தியக் குடியரசுத் தலைவர் பெற்றுள்ள அதிகாரங்கள் உண்மையில் அமைச்சரவையின் அதிகாரங்களே ஆகும்.** நடைமுறையில் அரசாங்கத்தின் முடிவுகள் அனைத்தும் அமைச்சரவையினாலேயே செய்யப்படுகின்றன. நடைமுறைக்குத் தக்க விதத்ததில் அவை குடியரசுத் தலைவரின் பெயரால் வெளியிடப்படுகின்றன.

- தேர்தல்கள் முடிந்து புதிய பாராளுமன்ற அமைக்கப்பட்டவுடன் முதலாவது கூட்டத்தில் இந்தியக் குடியரசுத் தலைவர் உரை நிகழ்த்துவார் இவ்வுரையில் அரசாங்கத்தின் கொள்கைகள் விளக்கப்படும். இந்த உரையானது 'குடியரசுத் தலைவரின்' உரை எனப்படும். **இவ்வுரை உண்மையில் அமைச்சர் அவையால் தயாரிக்கப்படுகின்றது.**
- மத்திய அரசாங்கத்தின் பணிகள் தொடர்பாகப் பொதுவான கொள்கைகளையும் அவற்றை அமல்படுத்தப் பின்பற்ற வேண்டிய வழி முறைகளையும்





Downloaded from https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree

அமைச்சரவை நிர்ணயம் செய்கின்றது. இதிலிருந்து **குடியரசுத் தலைவர் பெயரளவில்தான் தலைவராக உள்ளார் என்பது புலனாகும்.**

## பாராளுமன்றத்தில் மசோதாக்களை அறிமுகம் செய்யும் அதிகாரம்

- பாராளுமன்றத்தில் மசோதாக்களை அறிமுகம் செய்யும் அதிகாரம் எல்லா உறுப்பினர்களுக்கும் உண்டு. இருப்பினும் முக்கியமான மசோதாக்கள் அமைச்சர்களாலேயே அறிமுகப்படுத்தப்படும் **அமைச்சர்களால் அறிமுகம் செய்யப்படும் மசோதாக்கள் 'அரசாங்க மசோதாக்கள்'** எனப்படுகின்றன. **அமைச்சர் அல்லாத மற்ற உறுப்பினர்கள் அறிமுகம் செய்யும் மசோதாக்கள் 'தனி உறுப்பினர் மசோதக்கள்'** எனப்படுகின்றன.
- பாராளுமன்றத்தின் நிகழ்ச்சி நிரல் அமைச்சரவையினால் நிர்ணயம் செய்யப்படுகின்றது. மத்திய அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டம் பற்றிய அனைத்து விபரங்களையும் அமைச்சரவையே முடிவு செய்கிறது.
- இந்திய குடியரசுத் தலைவர் பெற்றுள்ள நீதிபதிகள் நியமன அதிகாரம் உண்மையில் அமைச்சரவையின் வாயிலாக பயன்படுத்தப்படுகிறது. இதைத்தான் ஷரத்து 74 பின்வருமாறு கூறுகிறது. பிரதம மந்திரியைத் தலைவராக கொண்ட அமைச்சரவை ஒன்று இருத்தல் வேண்டும் அது குடியரசுத்தலைவர் தனது பணியை செயலுறுத்த அவருக்கு உதவி மற்றும் ஆலோசனைகளை வழங்க வேண்டும்.
- அமைச்சரவை நாட்டு மக்களின் நல்வாழ்விற்கு தேவையான கொள்கைகளை நிர்ணயம் செய்து அவைகளுக்குச் சட்ட வடிவம் கொடுப்பதோடு மட்டுமின்றி அச்சட்டங்களை அமல் செய்யும் பொறுப்பையும் மேற்கொள்கிறது.

## நாடாளுமன்றம்

- **குடியரசுத்தலைவர், மாநிலங்களவை மற்றும் மக்களவை என்ற இரண்டு அவைகள் ஆகியவற்றைக் கொண்டதாக இந்திய நாடாளுமன்றம் அமைந்துள்ளது.**

**குடியரசுத்தலைவர்:**

- நாடாளுமன்றத்தில் இரண்டு அவைகளின் கூட்டத்தொடர் நடைபெறாதபோது, குடியரசுத் தலைவர் உடனடியாகச் செயல்படவேண்டிய அவசியமான ழ்நிலை இருப்பதாக அவர் திருப்தியடைந்தால், நாடாளுமன்றத்தால் இயற்றப்படும் சட்டத்தைப் போலவே செயல்வீச்சுடைய அவசரச் சட்டத்தைத் குடியரசுத்தலைவர் பிறப்பிக்கலாம்.

## மாநிலங்களவை

- ஒன்றியத்தின் பல்வேறு அங்கங்களாகிய மாநிலங்கள் மற்றும் ஒன்றிய நேரடி ஆட்சிப்பகுதிகளில் உள்ள மக்களின் மறைமுக பிரதிநிதித்துவ அமைப்பாக மாநிலங்களவை திகழ்கிறது.
- மக்கள்தொகை அதிகமுள்ள உத்திரப்பிரதேச மாநிலத்தில் இருந்து மிக அதிகபட்சமாக 34 உறுப்பினர்களும், மணிப்பூர், மிஜோரம், சிக்கம், திரிபுரா போன்ற சிறிய மாநிலங்களில் இருந்து தலா ஒரு உறுப்பினரும் மாநிலங்களவைக்குத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.
- அரசியலமைப்பின்படி மாநிலங்களவையில் 250க்கும் மிகாத உறுப்பினர்கள் இருப்பர். இவர்களில் 12பேர் குடியரசுத்தலைவரால் நியமிக்கப்படுவர். 238 பேர் மாநிலங்களில் இருந்தும், நேரடி ஆட்சிப் பகுதிகளில் இருந்தும் தேர்ந்தெடுக்கப்படுவர்.

**தகுதி**

- இந்திய குடிமகனாக இருக்க வேண்டும்





Downloaded from https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree

- 30 வயது நிரமியவராக இருக்க வேண்டும்
- பதவிக்காலம் 6 வருடங்கள். ஒவ்வொரு 2 வருடத்திற்கு ஒருமுறை 1.˙.3ல் ஒருபங்கு உறுப்பினர்கள் ஓய்வு பெறுகிறார்கள்.
- மாநிலங்களவையை கலைக்க முடியாது.
- துணைக்குடியரசுத்தலைவர் இதன் தலைவர்.
- அவையில் பணமசோதாவைத் தவிர எந்த மசோதவையும் கொண்டு வரலாம்.

## மக்களவை

- மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்டது. 18 வயது நிரம்பிய இந்தியக் குடிமகன் ஒவ்வொருவரும், சட்டத்தின்படி தகுதியிழப்புச் செய்யப்படாத பட்சத்தில் மக்களவைத் தேர்தலில் வாக்களிக்கும் உரிமை பெற்றவராவார்.
- மாநிலங்களில் உள்ள தொகுதிகளில் இருந்து நேரிடையாகத் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்கள் 530 க்கு மிகாமலும் நேரடி ஆட்சிப்பகுதிகளில் இருந்து நேரிடையாகத் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்கள் 20 க்கு மிகாமலும் கொண்டதாக மக்களவை இருக்க வேண்டும் என்று அரசியலமைப்புக் கூறுகிறது.
- மேலும் ஆங்கிலோ இந்திய சமுதாயத்தைச் சேர்ந்த இரண்டு உறுப்பினர்களைக் குடியரசுத் தலைவர் மக்களவைக்கு நியமனம் செய்யலாம். இவ்வாறாக **மக்களவையில் அதிகபட்சமாக 552 உறுப்பினர்கள் இருக்கலாம்.**

## நாடாளுமன்ற உறுப்பினர்களின் தகுதிகள்

- இந்திய குடிமகனாக இருக்க வேண்டும் **மாநிலங்களவைக்கு உறுப்பினராக வேண்டுமானால் 30வயது நிறைந்தவராகவும் மக்களவைக்கு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட 25 வயது நிறைந்தவராகவும் இருக்க வேண்டும்.**
- மக்களவைக்கும் மாநிலங்களவைக்கும் தலைவர் ஒருவரும் துணைத்தலைவர் ஒருவரும் இருக்க வேண்டும் என அரசியலமைப்புக் கூறுகிறது.
- இந்தியாவின் **குடியரசுத் துணைத்தலைவரே மாநிலங்களவையின் தலைவரும் ஆவார்.**
- மாநிலங்களவையின் துணைத்தலைவராக தமக்குள்ளேயே ஒருவரை அந்த அவையின் உறுப்பினர்கள் தேர்ந்தெடுத்துக் கொள்வர்
- மக்களவையின் தலைவரையும் (சபாநாயகர்) துணைத்தலைவரையும் (துணை சபாநாயகர்) தமக்குள்ளேயே அந்த அவையின் உறுப்பினர்களே தேர்ந்தெடுப்பர்.
- மக்களவைத்தலைவரும், துணைத்தலைவரும், மக்களவையின் உறுப்பினர்களாக நீடிக்க முடியாத நிலையில் பதவி விலக வேண்டும்.
- இருவரில் எவரேனும் பதவி விலக எண்ணினால் மற்றவருக்குத் தமது பதவிவிலகல் கடிதத்தை அனுப்ப வேண்டும்.
- அவர்களைப் பதவி நீக்கம் செய்ய வேண்டும் என்றால் 14 நாட்கள் முன்னறிவிப்புக் கொடுத்துவிட்டு மக்களவையின் பெரும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவோடு ஒரு தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டும்.
- மாநிலங்களவைத்துணைத் தலைவரைப் பதவி நீக்கம் செய்வதற்கான இதே போன்ற ஏற்பாடு பிரிவு 90ல் சொல்லப்பட்டு உள்ளது.
- ஒரு கூட்டத்தொடருக்கும் இன்னொரு கூட்டத் தொடருக்கும் இடையே ஆறுமாத கால இடைவெளி இருக்கக்கூடாது.
- பொதுவாக ஒவ்வொராண்டும் மூன்று நாடாளுமன்றத்தில் கூட்டங்கள் நடைபெறும்

அவை

- பட்ஜெட் கூட்டத்தொடர் (பிப்ரவரி.மே)
- மழைக்காலக் கூட்டத்தொடர் (ஜுலை, செப்டம்பர்)
- குளிர்காலக் கூட்டத்தொடர் (நவம்பர், டிசம்பர்)



Downloaded from https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree

- ஆனால் மாநிலங்களவையின் பட்ஜெட் கூட்டத்தொடர் மட்டும் மூன்று-நான்கு வாரகால இடைவெளியுடன் இரண்டு பகுதிகளாக நடைபெற்று ஓராண்டில் நான்கு கூட்டத்தொடர்களாக நடைபெறும்.
- எந்த ஓர் அவையானாலும் அதனை நடத்திச் செல்வதற்கு அவையின் மொத்த உறுப்பினர்களில் **பத்தில் ஒரு பங்கு உறுப்பினர்கள் கட்டாயம் ஆஜராகி இருக்க வேண்டும்.**
- பண மசோதாக்கள் மற்றும் ஏனைய நிதி மசோதாக்கள் தவிர வேறு எந்த மசோதாவானாலும் அதனை ஏதேனும் ஓர் அவையில் முதலில் அறிமுகப்படுத்தலாம்.
- அவ்வாறு அறிமுகப்படுத்தப்படும் மசோதா குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்கு அனுப்பப்படும் முன்னர் நாடாளுமன்றத்தின் இரண்டு அவைகளிலும் திருத்தங்கள் ஏதுமின்றியோ இரண்டு அவைகளும் ஒப்புக்கொண்ட திருத்தங்களுடனோ, ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும்.
- பண மசோதாவைத் தவிர ஏதேனும் ஒரு மசோதா சம்பந்தமாக இரண்டு அவைகளுக்கும் இறுதியாகக் கருத்து வேறுபாடுகள் இருக்குமானால் அவற்றைத் தீர்ப்பதற்காகக் குடியரசுத் தலைவர் இரண்டு அவைகளில் கூட்டுக் கூட்டத்தை அழைக்கலாம்.

<u>**பண மசோதா**</u>

- ஒரு மசோதா பணமசோதாவா என்ற ஐயம் தோன்றினால், அதில் **மக்களவைத் தலைவரின் தீர்ப்பே இறுதியானது**.
- பணம்சோதாவைக் குடியரசு தலைவரின் ஒப்புதலுக்காக அனுப்பும்போது, அது ஒரு பணமசோதா என்று மக்களவை தலைவர் சான்றளிக்க வேண்டும்.
- பணமசோதோவைக் குடியரசுத்தலைவரின் பரிந்துரையின் பேரில். **மக்களவையில் மட்டுமே அறிமுகப்படுத்த முடியும்**
- மக்களவையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்னர் மாநிலங்களவைக்கு அனுப்பப்படும் பணமசோதாவின் மீது ஏதேனும் திருத்தங்களுக்கான பரிந்துரைகள் இருக்குமானால் அவற்றை 14 நாட்களுக்குள் மாநிலங்களவை**தெரிவிக்கவேண்டும்**
- மக்களவை ஏதேனும் ஒரு திருத்தத்தையோ, திருத்தங்கள் அனைத்தையுமோ நிராகரித்துவிடலாம். திருத்தங்களை மக்களவை ஏற்றுக் கொண்டபடியே இரண்டு அவைகளும் அந்த மசோதாவை ஏற்றுக்கொண்டதாகக் கருதப்படும்.
- மாநிலங்களவையில் இருந்து 14 நாட்களுக்குள் அந்த மசோதா திருப்பி அனுப்பாவிட்டாலும், மக்களவை ஏற்றுக்கொண்ட வடிவத்திலேயே அந்த மசோதா இரண்டு அவைகளிலும் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக கருதப்படும்.

## <u>மக்களவைக்குரிய சிறப்பு அதிகாரங்கள் :- (Special Powers of the Lok Sabha)</u>

- பண மசோதா லோக்சபாவில் மட்டுமே அறிமுகப்படுத்த இயலும்.
- பண மசோதாவா இல்லையா என நிர்ணயிக்கும் உரிமை சபாநாயகருக்கு மட்டுமே உண்டு
- நாடாளுமன்றத்தின் கூட்டமர்வை சபாநாயகரே தலைமை தாங்குகிறார்.
- இராஜ்யசபாவானது பட்ஜெட்டை பற்றி விவாதிக்க மட்டுமே இயலும் மாறாக மானிய கோரிக்கை மீது வாக்கு அளிக்க இயலாது. இது லோக்சபாவிற்கு மட்டுமே உரியது.'





Downloaded from https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree

- தேசிய நெருக்கடியை மீண்டும் திரும்ப பெறுவதற்கன தீர்மானம் மக்களவில் மட்டும் இயற்ற இயலும்.
- இராஜ்யசபாவின் அமைச்சர்களை நம்பிக்கைல்லா தீர்மானம் விலக்க இயலாது. ஏனெனில் அமைச்சரவையானது முழுமையாக லோக்சபாவிற்கே பொறுப்பாகும் (Collectively responsible only to the Lok Sabha).

**மாநிலங்களவையின் சிறப்பு அதிகாரங்கள்:- (Special Powers of Rajya Sabha)**

- மாநிலப்பட்டியலில் உள்ள (249–ஒ)யின் மீது நாடாளுமன்றம் சட்டமியற்ற இது அங்கீகாரம் அளிக்கிறது..
- புதிதாக அகில இந்திய குடிமையாட்சிபணி புதிய பணி உருவாக்குவதற்கு நாடாளுமன்றத்தை அங்கீகரிக்கிறது (ஷரத்து – 312)
- குடியரசுத் துணைத்தலைவருக்கான பதவிநீக்கத்திற்கான தீர்மானம் இங்கு மட்டுமே நிறைவேற்ற இயலும்.
- உச்ச நீதிமன்றம் அல்லது மாநில நீதிமன்ற நீதிபதிகளை பதவி விலக்குதலுக்கான சிறப்பு முன்மொழி தலை வழங்குகிறது.

**மக்களவை உறுப்பினர்களுக்கு பாராளுமன்றத்தால் வழங்கப்பட்டுள்ள சலுகைகள்:-(Parlimentary Privileges to MPs)**

- மக்களவை உறுப்பினர்கள் நாடாளுமன்ற கூட்டத்தொடர் காலத்தின்போதோ அவை துவங்கும் முன் அல்லது முடிந்தபின் 40 நாட்களில் சிவில் வழக்குகளுக்காகவோ கைது செய்ய இயலாது. இது குற்றவியல் வழக்குகளுக்கு பொருந்தாது.
- நாடாளுமன்றத்தில் மட்டும் அவர்கள் விருப்படி பேச அதாவது பேச்சுரிமை வழங்கப்பட்டுள்ளது. அதற்காக நீதிமின்றங்களில் பதில் சொல்ல தேவையில்லை.

- கூட்டத்தொடரின் போது, நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருந்தாலும் மக்களவை உறுப்பினர் அவ்வழக்கிற்கு ஆதாரம் இல்லது சாட்சியாக இருப்பினும் நீதிமன்ற செலல தேவையில்லை.
- உறுப்பினர் நாடாளுமன்றத்தின் எல்லைக்குள் இருக்கும்போது அவை தலைமை தாங்குபவரின் அனுமதியின்றி கைது செய்யவோ அல்லது பிற நடடிக்கைகளை எடுக்க இயலாது.

**நாடாளுமன்ற குழுக்கள்:- (Parliamentary Committees)**

**பொதுகணக்கு குழு (PAC)**

நாடாளுமன்றத்தால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் 22 பேர் 15 பேர் லோக்சபா 7 போர் இராஜ்யசபா இங்கு உள்ளனர். ஒரு அமைச்சர் இந்தக்குழுவின் உறுப்பினராக இயலாது. சாநாயகர் இந்த குழுத்தலைவரை




Downloaded from https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree

நியமிப்பார். இதன் பணி – தணிக்கையாளர் தரும் அறிக்கையை அனைத்து கோணங்களிலும் சரிபார்பதாகும். மேலும் நாடாளுமன்றத்தால் அரசுக்கு வழங்கப்பட்ட நிதியானது தேவையின் நோக்கத்திற்குள் உள்ளதா என்பதையும் பார்க்கும்.

## மதிப்பீட்டுக்குழு:- (Estimate Commmittee)

இந்த குழுவில் ஆண்டுதோறும், நாடாளுமன்றத்தால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்30 பேர் உள்ளனர். இதன் தலைவர் ஆளுங்கட்சியிலிருந்து தேர்வு செய்யப்பட்டு சபாநாயகரால் பணி அமர்த்தப்படுகிறார். இதன் பணி – பட்ஜெட்டையும் சேர்த்து அதன் மதிப்பீட்டை ஆராயும் மற்றும் பொதுசெலவுகளில் ஆகும் செலவை பரிந்துரைத்தலும் ஆகும்.

## பொதுத்துறையின் குழு(Committee on Public Undertakings)

இதிலும் 22(15,7) பேர் உள்ளனர். தணிக்கை கணக்காளரின் இத்துறை பற்றிய அறிக்கையை ஆய்வு செய்தலும், இதன் செயல்பாடுகள் தொழிற்கொள்கைகளை பின்பற்றிய தாகவும் மற்றும் விவேகமுள்ள வர்த்தக செயல்பாடுகள் உள்ளனவா என்பது கண்காணிப்பதும் அதற்கு வழிகோலுதலுமாகும்.

## மாநில ஆளுநர்:

**அதிகாரங்கள்**

- .செயலாட்சி அதிகாரம்
- நிதித்துறை அதிகாரங்கள்:
    - ஆளுநரின் பரிந்துரை இல்லாமல் ஒரு பண மசோதா மாநிலச் சட்டசபையில் அறிமுகப்படுத்த முடியாது.
    - பட்ஜெட் என்று அழைக்கப்படும் வருடாந்திர நிதி அறிக்கையை ஆளுநர் சட்டமன்றத்தின் இரு அவைகளிலோ அல்லது ஒன்றிலோ சமர்ப்பிக்க வேண்டும்.
- சட்டமியற்றல் சார்ந்த அதிகாரங்கள்:ஒரு மாநிலத்தை பொறுத்தவரை ஆளுநரின் இசைவில்லாமல் சட்டமாக்கப்பட முடியாது. ஆளுநர் சில மசோதாக்களை குடியரசுத் தலைவரின் இசைவிற்காக ஒதுக்கீடு செய்ய ஷரத்து 200 உரிமையளிக்கிறது.சட்டமன்ற மேல் சபையின் ஆறில் ஒரு பங்கு உறுப்பினர்களை நியமனம் செய்ய ஆளுநருக்கு உரிமையளிக்கிறது

- **அவசர கால சட்டம்** பிறப்பிக்கும் அதிகாரம் (Ordinance ) ஷரத்து 213

- ஆளுநர் பிறப்பிக்கும் **அவசர கால சட்டம்** சட்டசபையில் அவையின் முன்போ. இரு அவைகள் இருப்பின் இரு அவைகளின் முன்போ ஆளுநரால் அவைகள் கூடும்போது சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
- சட்டசபை கூடிய தேதியிலிருந்து ஆறு வாரங்கள் வரை இந்த **அவசர கால சட்டங்கள்** அமலில் இருக்கும். இக்காலக்கெடுவிற்கு முன்பாகவே. சட்டசபையின் அவையோ. அவைகளோ மேற்படி **சட்டத்தை** ஒரு தீர்மானம் வாயிலாக நிராகரித்தால் தீர்மானம் நிறைவேறிய தேதியிலிருந்து **அச்சட்டம்** செல்லும்படி ஆகாது.
- ஆளுநர் பிறப்பித்த **அவசர கால சட்டத்தை** ஆறு வாரங்களுக்குள் அவராகவே திரும்பப் பெற்றுக்கொள்ளலாம்.
- தகுதிகள்: குடியரசுத் தலைவரின் தகுதிகளை ஒத்துள்ளது.



Downloaded from https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree

## தமிழ்நாடு - இந்திய நீதித்துறை

- ஷரத்து-124 முதல் 147 வரை, அரசியலமைப்புச் சட்டத்தின் பகுதி - 5, உச்சநீதிமன்றத்தின் அமைப்பு, சுதந்திரம், எல்லைப்பகுதி, அதிகாரம் மற்றும் செயல்முறைகளை பற்றி கூறுகிறது. நாடாளுமன்றமானது உச்சநீதிமன்ற (நீதிபதிகளின் எண்ணிக்கை) திருத்தச்சட்டம், 2008 (Supreme Court (Number of Judges) Amendment Act,2008)-யின் படி நீதிபதிகளின் எண்ணிக்கையை 26 லிருந்து 31 (தலைமை நீதிபதியையும் உயர்த்தியது) ஆக உயர்த்தியது.

### உச்சநீதிமன்ற அதிகாரமும் நீதிவரம்பும்

- உச்சநீதிமன்றத்தின் மூல நீதிவரம்பும். ஷரத்து 131.
- உச்சநீதிமன்றத்தின் மேல்முறையீட்டு நீதிவரம்பும் ஷரத்து 132
- உச்சநீதிமன்றத்தின் ஆலோசனை கூறும் நீதிவரம்பும் ஷரத்து 143
- உச்சநீதிமன்றத்தின் மறுசீராய்வு அதிகாரம். ஷரத்து 137
- உச்சநீதிமன்றத்தின் ஒரு பதிவு செய்துகொள்ளும் நீதிமன்றம் ஷரத்து 129

### நீதிபதிகளின் நியமனம்: (Appointment of Judges):

- குடியரசுத்தலைவர் உச்சநீதிமன்றத்தின் தலைமை நீதிபதியை நியமனம் செய்கிறார். அவரது ஆலோசனையின் பேரில் மற்ற நீதிபதிகளையும் குடியரசுத் தலைவரே நியமனம் செய்கிறார்.

### நீதிபதியாவதற்கான தகுதிகள்;( Qualification of Judges):

- அரசியலமைப்புச் சட்டத்தின் ஷரத்து 24-ன் படி உச்சநீதிமன்றத்திலோ அல்லது உயர்நீதிமன்றங்களிலோ நீதிபதியாவதற்கு பின்வரும் விதிமுறைகள் உள்ளன.
- அவர் இந்திய குடிமகனாக இருத்தல் வேண்டும்.
- உயர்நீதிமன்றங்களில் குறைந்தபட்சம் 5 ஆண்டுகள் நீதிபதியாக பணியாற்றிய அனுபவம் பெற்றிருக்க வேண்டும், அல்லது உயர்நீதிமன்றத்தில் குறைந்தபட்சம் 10 ஆண்டுகள் வழக்கறிஞராக பணியாற்றிய அனுபவம் பெற்றிருக்க வேண்டும் அல்லது குடியரசுத் தலைவரின் கருத்துரைப்படி சிறப்பு மிகு வழக்கறிஞராய் இருக்க வேண்டும். நீதிபதியின் பதவிகாலம் அரசியலமைப்பு சட்டத்தால் குறிப்பிடப்படவில்லை. மாறாக 65 வயது நிறைவடையும் வரை பதவி வகிக்கலாம். தனது பதவி விலகல் கடிதத்தை குடியரசுத் தலைவரிடம் வழங்கலாம். பாராளுமன்றத்தின் பரிந்துரையின் படி இவரை பதவி நீக்கம் செய்யலாம்.

### நீதிபதியை பதவிநீக்கம் செய்யும் முறை: (Re-moval of Judges)

- நாடாளுமன்றத்தின் பரிந்துரைக்குப் பிறகே குடியரசுத் தலைவர் நீதிபதியை பதவி நீக்கம் செய்வார். இதற்கு சிறப்பு பெரும்பான்மையின்படி ஆதரவு தெரிவிக்கப்பட வேண்டும். (அவையின் மொத்த உறுப்பினர்களில் பெரும்பான்மையும் மற்றும் 2/3 மடங்கு வந்து ஓட்டளிப்பும் தரவேண்டும்) பதவி நீக்கம் நிரூபிக்கப்பட்ட ஒழுக்க நெறி மீறல் (Proved misbehavior) மற்றும் இயலாமையின் (incapacity)காரணமாக அமையும்.

- உச்சநீதிமன்ற நீதிபதிகளின் ஊதியம், படிகள், சலுகைகள், விடுமுறை, ஓய்வூதியம் ஆகியவை அவ்வப்போது பாராளுமன்றத்தால் நிர்ணயிக்கப்படும் அரசியலமைப்புச் சட்டம் ஷரத்து 360-ஐ தவிர வேறு எந்த காரணத்திற்காகவும் நீதிபதியை நியமித்த பின் அவர்களது ஊதியத்தையோ அல்லது சலுகையையோ குறைக்க இயலாது.



Downloaded from https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree

**உச்ச நீதிமன்றத்தின் அதிகாரம் மற்றும் எல்லை**:-

முதல் விசாரணை அதிகாரம்.

(அ) அசல் அதிகார வரம்பு(Original Jurisdiction)பின்வரும் வழக்குகளை விசாரிக்க உச்சநீதிமன்றத்திற்கு மட்டுமே அதிகாரம் உண்டு.

(ஆ) மத்திய அரசிற்கும், மாநில அரசிற்கும் இடையில் வரும் வழக்குகள்.

(இ) மத்திய மற்றும் மாநில அரசு ஒருபுறமும் மற்றும் பிற மாநில அரசுகளுக்கு இடையில் வரும் வழக்குகள்.

(ஈ) மாநில அரசுகளுக்கு இடையில் எழும் வழக்குகள்.

**மேல்முறையீட்டு அதிகாரங்கள்: (Appellate Jurisdiction)**

- சிவில், குற்றவியல் மற்றும் அரசியலமைப்பு தொடர்பான வழக்குகள் உயர்நீதிமன்ற தீர்ப்பிற்கு எதிராக ஒருவர் உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யலாம். அதற்கு உயர்நீதிமன்றத்தின் ஒப்புதலும் தேவை.

**நீதிமன்றத்தின் மறுசீராய்விற்கான அதிகாரங்கள்: (Power of Judicial Review)**

- அரசியலமைப்பு சட்டப்படி இயற்றப்பட்ட சட்டங்கள் மற்றும் செயல்படுத்தப்பட்டுள்ள கொள்கைகள், நடவடிக்கைகளை இது தேர்வு செய்கிறது. அரசியலமைப்பு சட்டத்திற்கு புறம்பாக (violation of the Constitution)ஏதேனும் நடவடிக்கைகள் ஏற்பட்டிருந்தால் அது செல்லாது என அறிவித்து செயல்படாமல் தடுக்கிறது.
- அரசியலமைப்புச் சட்டத்தின் மேலாண்மை, கூட்டாட்சியின் சமநிலை, குடிமக்களின் அடிப்படை உரிமைகளை பாதுகாத்தல் ஆகியவை அடிப்படை கொள்கைகளின்படி இது செயல்படுகிறது.

**மற்ற அதிகாரங்கள்: (Other Powers)**

- குடியரசுத் துணைத் தலைவரின் தேர்தலில் ஏற்படும் சிக்கல்களை தீர்த்து வைக்கிறது.
- மத்திய குடிமையாட்சி தேர்வாணையத்தின் உறுப்பினர்கள் மீது எழும் புகார்களை குடியரசுத்தலைவர் பரிந்துரைத்த பிறகு அதனை விசாரிக்கிறது.
- இந்தியாவின் அனைத்து நீதிமன்றங்களும் இது எடுக்கும் நடவடிக்கைகளுக்கு கட்டுப்படும்.
- அரசியலமைப்பு சட்டத்தின் பொருள் விளக்கும் அதிகாரம் இதற்கு மட்டுமே உண்டு.

**உயர்நீதிமன்றம்: (HIGH COURT)**

- இந்திய அரசியலமைப்புச் சட்டம் பகுதி 6ல் ஷரத்து முதல் 231 வரை உயர்நீதிமன்றம் பற்றியும், அந்த அமைப்பு, சுதந்திரம், ஆளுகை வரம்பு, அதிகாரம் மற்றும் பணிகள் மற்றும் நடவடிக்கைகள் பற்றியும் கூறுகின்றது. உயர்நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கை பற்றி இந்திய அரசியலமைப்புச் சட்டம் எதுவும் குறிப்பிடவில்லை. அதை குடியரசுத் தலைவரின் விருப்புரிமைக்கு விட்டுவிட்டது. ஆகையால், குடியரசுத்தலைவர் நேரத்திற்கு நேரம் தகுந்தபடி நீதிபதிகளின் எண்ணிக்கையை முடிவு செய்துகொள்வார்.

**நீதிபதிகளின் தகுதிகள்: (Qualification of Judges)**

- இந்தியக் குடிமகனாக இருத்தல் வேண்டும்.
- இந்திய நிலப்பகுதியில் குறைந்தபட்சம் 10 ஆண்டுகள் நீதித்துறை அலுவலகம் சார்ந்திருக்க வேண்டும். அல்லது ஏதேனும் உயர்நீதிமன்றத்தில் பத்தாண்டுகள் வழக்கறிஞராக (அல்லது உயர்நீதிமன்றங்களின் வழக்கறிஞராக )இருத்தல் வேண்டும்.



Downloaded from https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree

- இந்திய அரசியலமைப்புச் சட்டம் உயர்நீதிமன்ற நீதிபதிகளுக்கு என்ற குறைந்த பட்ச வயது நிர்ணயிக்கவில்லை.

**பதவி நீக்கம்: (Removal of Judges)**

- உச்சநீதிமன்ற நீதிபதிகளின் பதவிநீக்கம் போன்றே உயர்நீதிமன்ற நீதிபதிகளின் பதவிநீக்க முறையும் அமைந்துள்ளது.

**உயர்நீதிமன்றத்தின் அதிகாரம் மற்றும் ஆளுகை வரம்பு:**
**(Jurisdiction and Power of High Court)**

**அசல் அதிகார வரம்பு: Original Jurisdiction**

கீழ்க்காணும் சச்சரவுகள் உயர்நீதிமன்றத்தின் அசல் அதிகார வரம்பு கீழ்நேரடியாக வரும்.

- திருமணம் , விவாகரத்து, நிறுவன சட்டங்கள் மற்றும் நீதிமன்ற அவமதிப்பு.
- நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களின் தேர்தல் சம்பந்தமான சச்சரவுகள்.
- வருவாய் வசூலிப்பு சம்பந்தமான வழக்குகள்.
- குடிமக்களின் அடிப்படை உரிமைகள்.
- கல்கத்தா, மெட்ராஸ், பம்பாய் மற்றும் டெல்லி ஆகிய நான்கு உயர்நீதி மன்றங்களும் உரிமையியல் வழக்குகளில் அசல் அதிகார வரம்பு உள்ளது.

**நீதிப்பேராணை: Writ Jurisdiction**

- ஷரத்து 226- உயர்நீதிமன்றத்தின் நீதிப்பேராணை பற்றி கூறுகின்றது. இவை ஆட்கொணர்வு நீதிப்பேராணை, செயலுறுத்தும் நீதிப்பேராணை, தடையுறுத்தல் நீதிப்பேராணை, தகுதிமுறை வினவும் நீதிப்பேராணை மற்றும் நெறிமுறை உணர்த்தும் நீதிப்பேராணை. இது பாதிக்கப்பட்ட அடிப்படை உரிமையை நிலைநாட்டும் பொருட்டு உள்ளது.

**கொலீஜியம் முறை: Collegium System**.

- கொலீஜியம் முறை என்பது உச்சநீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்ற நீதிபதிகளை நியமனம் மற்றும் மாறுதல் போன்ற நடவடிக்கைகளை செய்யும் அமைப்பு ஆகும். இந்திய தலைமை நீதிபதி, நான்கு மூத்த உச்சநீதிமன்ற நீதிபதிகள் மற்றும் மூன்று உறுப்பினர்கள். உயர்நீதிமன்றம் சார்பாக(உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி உட்பட) இவர்கள் அனைவரையும் உள்ளடக்கியது கொலீஜியம் ஆகும்.

**துணை அல்லது கீழமை நீதிமன்றங்கள்: Subordinate Courts**.

- கீழமை நீதிமன்றங்கள், உயர்நீதிமன்றத்தின் கீழ் மாவட்ட அளவில் செயல்படும் (The District and Local Levels) நீதிமன்றங்களாகும். இந்திய அரசியலமைப்புச் சட்டம் பகுதி 6-ல் ஷரத்து 233 முதல் 237 வரை இதனைப் பற்றி விவரிக்கப்படுகிறது.
- நியமனம், பதவி மற்றும் பதவி உயர்வு போன்ற மாவட்ட நீதிபதிகளின் செயல்பாடுகளை உயர்நீதிமன்றத்துடன் கலந்தாலோசித்து ஆளுநர் முடிவெடுப்பார்.

**நீதிபதியாக நியமிக்க தகுதிகள்: (The qualification to be appointed as a judge)**

- இவர் மத்திய மற்றும் மாநில அரசு பணிகளில் இருக்கக்கூடாது. இவர் வழக்கறிஞராக அல்லது பிளீடராக ஏழுவருடங்கள் பணியாற்றியிருக்க வேண்டும்.
- உயர்நீதிமன்றத்தால் இவர் பரிந்துரை செய்யப்பட்டிருக்க வேண்டும்.
- மாவட்ட மற்றும் கீழமை நீதிமன்றங்களின் அதிகாரம் உயர்நீதிமன்றத்திடம் உள்ளது. உயர்நீதிமன்றத்தின் கீழ் மூன்றடுக்கு நீதிமுறை( வ்ாசநந வனைசள ழக உளைடை யனெ உசஅைெயட உழரசவ) உள்ளது. மாவட்ட நீதிபதியே மாவட்டத்தின்




Downloaded from https://t.me/tnpscfree

உயர்நீதித்துறை அதிகாரியாவார். குற்றவியல் வழக்குகளில் (அமர்வு நீதிபதி) மற்றும் உரிமையியல் வழக்குகளில் (மாவட்ட நீதிபதி) இவரிடம் முதன்மை மற்றும் மேல்முறையீட்டு நீதி அதிகாரம் உள்ளது. இவரால் கொடுக்கப்பட்ட தூக்கு தண்டனை உயர்நீதிமன்றத்தால் உறுதி செய்யப்படுகின்றது.

- மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றங்களுக்கு கீழ் உரிமையியல் வழக்குகளில் கீழ் நீதிபதியும், குற்றவியல் வழக்குகளில் முதன்மை நீதித்துறை குற்றநடுவரும்(ஊாறைநக துரனைஉயைட ஆயபளைவசயவந) உள்ளனர். இதற்கும் கீழ் உரிமையியல் வழக்குகளில் முன்சீப் நீதிமன்ற நடுவரும் உள்ளனர். இதற்கும் கீழ் உரிமையியல் வழக்குகளில் முன்சீப் நீதிமன்ற நீதித்துறை நடுவரும், குற்றவியல் வழக்குகளில் குற்ற நடுவரும் கவனிக்கின்றனர்.

## மத்திய மற்றும் மாநிலங்களுக்கு இடையே உள்ள உறவுகள்

**சட்டமியற்றும் உறவுகள்:**

- ஷரத்து 245 பின்வரும் மூன்று பட்டியல்களைக் குறிப்பிடுகிறது. அவை
- மத்திய பட்டியல்: 97 துறைகள் (முன்பு). தற்போது 100 துறைகள்.
- மாநில பட்டியல்: 66 துறைகள் (முன்பு). தற்போது 61 துறைகள்.
- பொது பட்டியல்: 47 துறைகள்(முன்பு). தற்போது 52 துறைகள்.

**நிர்வாக ஆட்சி உறவுகள்:**

- இதனைப்பற்றி 256 முதல் 263வரை உள்ள ஷரத்துக்கள் கூறுகிறது.
- மத்திய அரசினால் மாநில அரசிற்கு இடப்படும் ஏவுரை அல்லது கட்டளை.
- மத்திய அரசின் பணிகள் மாநில அரசிடம் ஒப்படைக்கப்படல்
- அனைத்திந்திய அரசுப்பணிகள்
- உதவித் தொகை அளிப்பு.
- முழு நம்பிக்கை மற்றும் மதிப்பு குறித்த வகைமுறைகள்

**நிதிஉறவுகள்:**

- சட்டத்தின் அனுமதியின்றி வரி விதிக்கவோ அல்லது வசூலிக்கவோ கூடாது என 265 திட்டவட்டமாக கூறுகின்றது.
- பொதுப்பட்டியல் எவ்விதமான வரியையும் கொண்டிருக்கவில்லை
- **மத்திய அரசால் விதிக்கப்படும் மாநில அரசுகளால் வசூலிக்கப்பட்டு பயன்படுத்தப்படும் வரிகள்** மத்திய பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள மத்திய தீர்வைகள் மற்றும் மருந்து மற்றும் ஒப்பனை ஆக்கப் பொருள்கள் மீதான ஆயத்தீர்வைகள்.
- **மத்திய அரசால் விதிக்கப்பட்டும் வசூலிக்கப்பட்டும். மாநில அரசால் பயன்படுத்தப்படும் வரிகள்:** 1.நகர நில வரி 2.சரக்கு மற்றும் பயணிகளால் வரி 3.இரயில் கட்டண வரி 4.பங்கு மாற்ற நிலையை வரிகள் 5.விளம்பரவரிகள் 6.மாநிலங்களுக்கிடையே நடக்கும் வணிகத்தின் போது வாங்கப்படும் மற்றும் விற்கப்படும் பொருட்களின் மீதான வரிகள்
- **மத்திய அரசால் விதிக்கப்படும் வசூலிக்கப்பட்டும் மத்திய அரசிற்கும் மாநில அரசுக்களுக்குமிடையே பகிர்ந்தளிக்கப்படும் வரிகள்**: 1.வருமான வரி 2.மத்திய பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள வரிகள். அதாவது மருந்து மற்றும் ஒப்பனை ஆக்கப்பொருட்கள் மீதான ஆயத்தீர்வைகள் தவிர.
- மத்திய அரசால் விதித்து, வசூலிக்கப்பட்டு. மத்திய அரசிற்கும் மாநில அரசுகளுக்குமிடையே பகிர்ந்து அளிக்கப்படலாம் எனப்படக்கூடிய வரிகள்: ஷரத்து 272 தெரிவிக்கிறது.

- **மாநில அரசால் விதிக்கப்பட்டு வசூலிக்கப்படும் வரிகள்:**
  - மாநில நிலங்கள் தவிர்த்த மற்ற சொத்துக்களை வாரிசுரிமையாகப் பெறுவோர் மீதான தீர்வை.
  - விவசாய நிலங்கள் தவிர்த்த மற்ற சொத்துக்கள் மீதான மரண வரி.





Downloaded from https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree

- ரயில் மூலமாகவும், கடல்வழியாகவும் செல்லும் பயணியர் மற்றும் பண்டங்கள் மீதான தீர்வை.
- ரயில்வே பயணக்கட்டணங்கள் மற்றும் சரக்குக் கட்டணங்கள் மீதான வரி.
- பங்கு சந்தை வியாபாரங்கள் மீதான வரி.
- செய்தித்தாள்களை விற்பது மற்றும் வாங்குவதும் மீதான வரி.
- செய்தித்தாள்களில் விளம்பரம் தருவதற்கும் வெளியிடுவதற்கும் விக்கப்படும் வரி.
- செய்தித்தாள்கள் தவிர்த்த பிற பண்டங்களின் மாநிலங்களுக்கு இடையேயான விற்பனை அல்லது வாங்குதல் மீதான வரி
- மாநிலங்களுக்கு இடையே அனுப்பபடும் சரக்குகள் மீதான வரி.

➢ **மத்திய அரசால் விதிக்கப்பட்டு வசூலிக்கப்படும் வரிகள்:** சுங்க வரி நிறுவனங்களின் வருமான வரி. மூலதன மதிப்பு வரி. வருமான வரி மீதான மேல்வரி ஒன்றியப் பட்டியலில் உள்ள விஷயங்கள் மீது விதிக்கப்படும் வரி ஆகியவை முற்றிலும் ஒன்றியத்துக்கு உரியவை.

**நிதிக்குழு**

➢ அரசியலமைப்புச் சட்டத்தின் 280வது ஷரத்தும், 281வது ஷரத்தும் நிதிக்குழுவின் அமைப்பு குறித்து அதன் பணிகள் குறித்தும் அதன் பணிகள் குறித்தும் கூறுகின்றன.

➢ அரசியலமைப்பு தோன்றிய இரண்டு ஆண்டிற்குள் இந்தியாவின் குடியரசுத் தலைவர் நிதிக்குழு ஒன்றினை அமைக்க வேண்டும் என்று. அரசியலமைப்புச் சட்டம் குறிப்பிடுகின்றது. ஐந்தாண்டிற்கு ஒருமுறை நிதிக்குழு அமைக்க வேண்டும். நிதிக்குழுவிற்கு ஒரு தலைவரும் மற்றும் நான்கு அங்கத்தினர்களும் இருப்பார்கள். இவர்கள் குடியரசுத்தலைவரால் தகுதிகள் என்ன என்றும் எப்படி தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்றும் பாராளுமன்றம் கூறுகிறது.

**பணிகள்**

➢ இது மத்திய அரசு மற்றும் மாநிலங்களுக்கு இடையே நிதி எவ்வாறு பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என குடியரசுத் தலைவருக்குப் பரிந்துரை செய்கின்றது.

➢ இந்தியாவின் திரட்டு நிதியில் இருந்து மாநிலங்களுக்கு எவ்வாறு நிதிஒதுக்குவது என்பது குறித்து கொள்கையளவில் இக்குழு பரிந்துரைக்கும்.

➢ இந்தியாவின் பொருளாதாரம் மேம்பட்டு விளங்கத் தேவையான ஆலோசனைகளை குடியரசுத் தலைவருக்கு வழங்குகிறது.

➢ நிதி குறித்த் விஷயங்கள் தொடர்பாக குடியரசுத் தலைவர் ஏதேனும் ஆலோசனை கேட்டால் நிதிக்குழு அவருக்கு அறிவுரை வழங்கும்.

**எஞ்சியுள்ள அதிகாரங்கள்**

பாராளுமன்றத்தின் எஞ்சியுள்ள அதிகாரங்களைப் பற்றி ஷரத்து 248 கூறுகிறது. அதன்படி இணைப்புப் பட்டியலிலோ அல்லது மாநில பட்டியலிலோ விளக்கப்படாத எத்துறையின் மீதும் சட்டமியற்றும் அதிகாரத்தை, பாராளுமன்றம் முழுமையாகப்பெற்றுள்ளது.

**பஞ்சாயத்து மற்றும் நகராட்சி மன்றம்: (LOCAL GOVERNMENT)**

**பஞ்சாயத்து ராஜ் அமைப்பு: Panchayat Raj Institutions.**



Downloaded from https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree

பஞ்சாயத்து ராஜ் அமைப்பு முறை என்பது தன்னாட்சி அரசு முறையின் முக்கியமான அமைப்பாகும். இது 1992-ல் அரசியலமைப்பு திருத்தம் (73 rd constitutional amendment of 1992) மூலம் அரசமைப்பில் சேர்க்கப்பட்டது. இது ஷரத்து 40-க்கும் செயல்வடிவம் கொடுத்தது. சுதந்திரம் அடைந்தது முதல் பல அரசுகள் இதற்கு முக்கியத்துவம் அளித்து நடைமுறைப்படுத்த முயன்றன. அவர்கள் பல குழுக்களையும் அமைத்தார்கள்.

- '1956-ல் பல்வந்தராய் மேத்தா" தலைமையில் குழு (Balwantrai Mehta Committee) அமைக்கப்பட்டது. அதன் பரிந்துரைகள்.
- மூன்றடுக்கு( Three Tier) பஞ்சாயத்து ராஜ் முறை - கிராம அளவில் கிராம பஞ்சாயத்து வட்டார அளவில் பஞ்சாயத்து சமிதி மற்றும் மாவட்ட அளவில் ஜில்லா பரிஷத்.
- அனைத்து திட்டமிடல் மற்றும் வளர்ச்சி சார்ந்த நடவடிக்கைகளை இவற்றின் மூலம் நடைபெற வேண்டும்.
- அதிகாரம் மற்றும் பொறுப்பு மாற்றம் நேர்மையான முறையில் நடைபெற வேண்டும்.
- பணிகள் மற்றும் பொறுப்புகளை செய்வதற்கு போதிய அளவில் நிதி ஆதாரம் அளிக்கப்பட வேண்டும்.

இவையனைத்து பரிந்துரைகளும் அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டு பஞ்சாயத்து ராஜ் அமைப்பு ஏற்படுத்தப்பட்டது.

- முதலில் 'ராஜஸ்தான் மாநிலம்" (Rajasthan being the first) இதனை ஏற்று நடைமுறைப்படுத்தியது.
- '1977-ல் அசோக் மேத்தா குழு" (ASHOK MEHTA COMMITTEE) அமைக்கப்பட்டது. இது நடைமுறையில் இருக்கும் அமைப்பின் பணிகளையும் மேலும் சிறப்பாக நடைமுறைப்படுத்த பரிந்துரை செய்தது. அவற்றில் சில

- மூன்றடுக்கு முறை மாற்றியமைக்கப்பட்டு இரண்டடுக்கு முறையாக ( The Two-Tier System) மாற்ற வேண்டும்.
- ஜில்லா பரிஷத் (Zila Parishad), மாவட்ட அளவிலும், அதற்கு கீழ் மண்டல பஞ்சாயத்து (MANDAL PANCHAYAT). இது15000 முதல் 20000 வரை மக்கள் தொகை கொண்டுள்ள கிராமங்களில் ஏற்படுத்த வேண்டும்.
- ஜனதா அரசாங்கம் கவிழ்ந்ததனால் இந்த பரிந்துரையின் மேல் எந்த முயற்சியும் எடுக்கப்படவில்லை. 1991-ல் காங்கிரஸ் அரசாங்கம் இதற்கு அரசியலமைப்பு அந்தஸ்து கொடுத்தது. 73-வது அரசியலமைப்பு சட்டத்திருத்தம் மூலம் நிறைவேற்றப்பட்டது.

**73-வது சட்டத்திருத்தச் சட்டம் -1992: (Seventy Third Amendment Act of 1992)**

- இந்தச் சட்டம் ஷரத்து 243 முதல் 243 (ஓ) மற்றும் புதிய பகுதி 9- யை 11-வது அட்டவணையில் சேர்ந்துள்ளது. இந்தச்சட்டம் பஞ்சாயத்து ராஜ் அமைப்பிற்கு அரசிலமைப்புப் அந்தஸ்து வழங்கியுள்ளது. மேலும் மாநிலங்கள் இவ்வமைப்பை ஏற்படுத்துவது கட்டாயமாக்கியும் உள்ளது.
- இந்தச் சட்டம் ஜம்மு-காஷ்மீர், மேகாலயா, மிசோரம், நாகலாந்து மற்றும் அட்டவணையில் உள்ள பகுதிகள் சிலவற்றிலும் இதனை நடைமுறைப்படுத்த முடியாது.
- இச்சட்டம் பஞ்சாயத்து அமைப்புகளில் மூன்றடுக்கு அமைப்பை கொடுத்துள்ளது.

**நகராட்சிகள்: (Municipalities)**

- நகர தன்னாட்சி அரசாங்கத்தின் அங்கம் நகராட்சி ஆகும். 74-வது அரசியலமைப்புச் சட்டத் திருத்தம் 1992-ல் இயற்றப்பட்டு அதன் மூலம் பகுதி IX A - வானது அரசமைப்பில் புதிததாக சேர்க்கப்பட்டது. அதில் ஷரத்து 243-P முதல் 243





Downloaded from https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree

ZG வரை இணைக்கப்பட்டது. மேலும் 12-வது அட்டவணை சேர்க்கப்பட்டு அதில் 18 பொருண்மைகள் வகையிடப்பட்டது.

- இச்சட்டத்தின் படி நகராட்சி உறுப்பினர்கள் மக்களால் நேரடியாக தேர்ந்தெடுக்கப்பபடுகிறார்கள். மாநில சட்டமன்றமானது நகராட்சி தலைவரை தேர்ந்தெடுக்கும் தேர்தல் முறையை அளிக்கும். வார்டு குழுக்களை (Wards Committees) அமைக்க வேண்டும். நகராட்சி நிலப்பபகுதியை ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வார்டுகளாக பிரிக்க வேண்டும். அவ்வாறு பிரிக்கப்படும் போது அந்த நகராட்சி நிலப்பகுதியின் மக்கள் தொகை 3 இலட்சம் அல்லது அதற்கு மேல் இருக்க வேண்டும்.
- இச்சட்டம் மாவட்ட திட்டக் குழுவை அமைக்க வழிவகை செய்கின்றது. இது வளர்ச்சிக்கான திட்டத்தினை மாவட்ட முழுவதும் நடைமுறைப்படுத்துகின்றது.
- மேலும் பகுதி IX-ல் கூறியதுபோல் காலம், தகுதி, தேர்தல், அதிகாரம் , பணிகள், நிதி போன்றவை அனைத்து பகுதி ஐஓ யு-வில் அடங்கும்.

## நெருக்கடிகால சட்ட வகைமுறைகள்

இந்திய அரசியல் அமைப்பு 3 வகையான நெருக்கடி நிலைமைகளை பற்றிக் குறிப்பிடுகிறது. **தேசிய நெருக்கடி நிலைமை மாநில நெருக்கடி நிலைமை. நிதி நெருக்கடி நிலைமை**

### தேசிய நெருக்கடி நிலைமை:

- இந்தியாவின் பாதுகாப்பு வெளித்தாக்குதலாலோ ஆயுதக் கலகங்களாலோ அல்லது போரினாலோ அச்சுறுத்தப்படுகிறது என குடியரசுத் தலைவர் திருப்தியுற்றால் அவர் இந்தியா முழுமைக்குமோ அல்லது இந்திய நாட்டின் ஒரு குறிப்பிட்ட பகுதிக்கோ நெருக்கடி நிலைமை பிரகடனப்படுத்தலாம் என **ஷரத்து 352** (1) கூறுகிறது.
- நெருக்கடி நிலைமை பிரகடனமானது பாராளுமன்றத்தின் இரு அவைகளின் முன்பும் சமர்ப்பிக்கப்படவேண்டும் அதனை இரு அவைகளும் ஏற்றுக் கொள்ளவில்லை என்றால் அப்பிரகடனமானது ஒரு மாதத்திற்குள் தன் செயல்திறனை இழந்து விடும். என ஷரத்து 352 (4) கூறுகிறது.
- ஏற்கனவே ஒரு நெருக்கடி நிலைமை பிரகடனம் இருப்பினும், மேலும் ஒரு நெருக்கடி நிலைமை பிரகடனத்தை குடியரசுத்தலைவர் அறிவிக்கலாம் என ஷரத்து 352 (9) கூறுகிறது.

### மாநில நெருக்கடி நிலைமை:

- **ஷரத்து 356**ன் படி குடியரசுத்தலைவர், ஒரு மாநில ஆளுநர் அனுப்பிய அறிக்கையினைப் பெற்றதின் பேரிலோ அல்லது அம்மாநில அரசாங்கம் அரசியலமைப்பு சட்ட வகைமுறைகளின்படி நடத்த முடியாத சூழ்நிலை உருவாகி உள்ளது என அவர் திருப்தியுற்றாலோ, அந்த மாநிலத்தில் அவர் நெருக்கடி நிலைமையைப் பிரகடனப் படுத்தலாம்.
- ஷரத்து 356ன் படி மாநில நெருக்கடி நிலைமை பிரகடனமானது பாராளுமன்றத்தின் ஒவ்வொரு அவையின் முன்பும் வைக்கப்பட வேண்டும். அதனை இரண்டு மாத காலம் முடிவடையும் முன் பாராளுமன்றத்தின் இரு அவைகளும் அங்கீகரிக்கவில்லை என்றால் அது இரண்டு மாத காலம் வரை அமலில் இருக்கும்.
- அத்தகு பிரகடனத்தை அதனைத் தொடர்ந்த ஒரு பிரகடனத்தினால். திரும்பப்பெற்றுக் கொள்ளலாம் அல்லது மாற்றியமைக்கலாம்.
- இந்த பிரகடனமானது மக்களவையினால் அங்கீகரிக்கப்பட்டுவிட்டால். அது ஆறுமாதங்கள் வரை அமலில் இருக்கும்.
- இந்த ஆறுமாத காலம். பாராளுமன்றத்தால் நீட்டிக்கப்படலாம். ஆனால் எந்த நெருக்கடி நிலைமை பிரகடனும் மூன்று ஆண்டுகாலம் முடிவடைந்தவுடன், குடியரசுத் தலைவருக்கோ அல்லது பாராளுமன்றத்திற்கோ, அப்பிரகடனத்தைத் தொடர்ந்திருக்கச் செய்ய அதிகாரம் இல்லை.





Downloaded from https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree

➢

**நிதி நெருக்கடி நிலைமை**

- இந்தியாவின் நிதி நிலைமை அல்லது கடன் நிலைமை அச்சுறுத்தப்படக்கூடிய சூழ்நிலை உருவாகி உள்ளது என குடியரசுத்தலைவர் திருப்தியுற்றால் அவர் நிதி நெருக்கடி நிலைமையை பிரகடனப்படுத்தலாம் என **ஷரத்து** 360 கூறுகிறது.
- மாநில அரசு ஊழியர்கள், உச்ச மற்றும் உயர் நீதிமன்ற நீதிபதிகள். இவர்களின் ஊதியத்தை குறைக்க குடியரசுத்தலைவர் ஏவுரைக்கலாம்.
- மாநிலச் சட்டமன்றங்களாய் நிறைவேற்றும் எல்லா நிதி மசோதாக்களையும் தமது பரிசீலனைக்கு அனுப்புமாறு குடியரசுத் தலைவர் உத்தரவிடலாம். இந்த மாதிரியான நெருக்கடி நிலைமை இதுவரை பிரகடனப்படுத்தப்படவில்லை.

**அரசியலமைப்பு சார்ந்த அமைப்புகள்**

| | | |
|---|---|---|
| 1. | தேர்தல் ஆணையம் | ஷரத்து 324–ன்படி 1950–ல் சுதந்திரமான வெளிப்படையான தேர்தல் நடத்துவதற்காக உருவாக்கப்பட்டது. 1989 வரை ஒரு உறுப்பினர் அமைப்பாக இருந்தது பிறகு ஒரு தலைமை தேர்தல் ஆணையர் மற்றும் இரண்டு தேர்தல் ஆணையர்கள் கொண்ட அமைப்பாக மாற்றப்பட்டது. 1990–ல் மீண்டும் ஒரு உறுப்பினர் கொண்ட அமைப்பாக மாற்றப்பட்டது. 1993–ல் மீண்டும் மூன்று நபர்கள் கொண்ட அமைப்பாக மாற்றப்பட்டது. |
| 2. | மத்திய பணியாளர் தேர்வாணையம் (UPSC) | ஷரத்து 315 முதல் 323 வரை பகுதி: XIV, தலைவர் மற்றும் உறுப்பினர்கள் குடியரசு தலைவரால் நியமிக்கப்படுவார்கள் பதவிக்காலம் 6 வருடம் அல்லது 65 வயது |
| 3. | மாநில பணியாளர் தேர்வாணையம் | ஷரத்து 315 முதல் 323 வரை பகுதி: XIV, தலைவர் மற்றும் உறுப்பினர்கள் ஆளுநர் அவர்களால் நியமிக்கப்படுவார். ஆனால் பதவி நீக்கம் உச்ச நீதி மன்ற விசாரனை அடிப்படையில் குடியரசுத்தலைவரால் மட்டுமே செய்ய இயலும். பதவிக்காலம் 6 வருடம் அல்லது 62 வயது |
| 4. | நிதி ஆணையம் | ஷரத்து 280–ன்படி 1951–ம் ஆண்டு உருவாக்கப்பட்டது. குடியரசுத்தலைவரால் ஒவ்வொரு ஐந்தாண்டுக்கு ஒரு முறை அமைக்கப்படும். ஒரு தலைவர் மற்றும் நான்கு உறுப்பினர்களை கொண்டது. மத்திய மாநிலை அரசுக்கிடையே நிதி பங்கீடுகள் குறித்த ஆலோசனைகள் வழங்கும்.14–வது நிதி ஆணையம் 2013–ல் அமைக்கப்பட்டு 2014–ல் அறிக்கை சமர்ப்பித்துள்ளது. இது 2015 முதல் 2020 வரைவுள்ள காலத்திற்கானது இதன் தலைவர் YV. ரெட்டி . |
| 5. | National Commission for SCs | ஷரத்து 338, 2004–ம் ஆண்டுவரை SC மற்றும் ST இனத்தவருக்கு ஒருங்கே இருந்த ஆணையம் 89–வது அரசியலமைப்பு சட்ட திருத்தம் (2003)–ன்படி தனித்தனியாக பிரிக்கப்பட்டது. |
| 6. | National Commission for STs | ஷரத்து 338–A, 2004–ம் ஆண்டுவரை SC மற்றும் ST இனத்தவருக்கு ஒருங்கே இருந்த ஆணையம் 89–வது அரசியலமைப்பு சட்ட திருத்தம் (2003)–ன்படி தனித்தனியாக பிரிக்கப்பட்டது. |
| 7. | மொழி சிறுபான்மையினருக்க | 7–வது சட்ட திருத்தம் 1956 ஷரத்து 350–B பகுதி –XVII |





Downloaded from https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree

| | | |
|---|---|---|
| | ான சிறப்பு அலுவலர் Special officer for Linguistic Minorities | |
| 8. | தலைமை கணக்கு அலுவலர் Comptroller and Auditor General of India | ஷரத்து–148 இந்திய நிதியத்தின் பாதுகாவலர் எனப்படும் இதன் தலைவர் குடியரசு தலைவரால் நியமிக்கப்படுவர் பதவிக்காலம் 6 வருடம் அல்லது 65 வயது |
| 9. | இந்தியாவின் தலைமை வழக்கறிஞர் Attorney General of India | ஷரத்து 76 குடியரசுத்தலைவரால் நியமிக்கப்படுகிறார். |
| 10. | மாநில தலைமை வழக்கறிஞர் Advocate General of the State | ஷரத்து–165 மாநில ஆளுநரால் நியமிக்கப்படுகிறார். |

**அரசியலமைப்புச்சாராத அமைப்புகள் (Non Constitutional Bodies)**

| | | |
|---|---|---|
| 1. | திட்ட ஆணையம் Planning Commission | பாராளுமன்ற தீர்மானத்தின் அடிப்படையில் மார்ச்–1950–ல் உருவாக்கப்பட்டது. இந்தியாவில் திட்டமிடுதலின் முதன்மைநிறுவனமாக கருதப்பட்டது. ஐந்தாண்டு திட்டங்களை உருவாக்குதல் இதன் முக்கிய பணியாகும் தலைவர் பிரதமர் 2014–ல் இது கலைக்கப்பட்டு நிதி ஆயோக் (NITI Aayog) உருவாக்கப்பட்டது. |
| 2. | தேசிய வளர்ச்சி குழு National Development Council | பாராளுமன்ற தீர்மானத்தின் அடிப்படையில் ஆகஸ்டு–1952–ல் உருவாக்கப்பட்டது. இதன் முக்கிய பணி ஐந்தாண்டு திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்குவது இதன் தலைவர் பிரதமர் 01.01.2016 முதல் இது கலைக்கப்படுவதாக முடிவு செய்யப்பட்டு இவற்றின் பணிகள் நிதி ஆயோக்–ன் Governing Council –லிடம் ஒப்படைக்கப்பட உள்ளது. |
| 3. | நிதி ஆயோக் (NITI Aayog) | NITI – National Institution for Transforming India<br>01.01.2015 அன்று திட்ட ஆணையத்திற்க பதிலாக உருவாக்கப்பட்டது பாராளுமன்ற தீர்மானத்தின் அடிப்படையில் தோற்றுவிக்கப்பட்டது. (Created by an executive resolution of the Union Cabinet, Neither a constitutional body nor a statutory body).<br>தலைவர் : பிரதமர், உறுப்பினர்கள் அனைத்து மாநில முதல்வர்கள் டெல்லி மற்றும் புதுச்சேரி யூனியன் பிரதேச முதல்வர்கள், மற்ற யூனியன் பிரதேசங்களின் துணை நிலைய ஆளுநர்கள் பிரதமரால் நியமிக்கப்படும் நான்கு மத்திய அமைச்சர்கள் துறை சார்ந்த சிறப்பு வல்லுநர்கள்.<br>துணை தலைவர்: பிரதமரால் நியமிக்கப்படுவர் |

**அரசியலமைப்பு சாராத சட்டப்பூர்வமான அமைப்புகள்**
**(Non-Constitutional and Statutory Bodies)**



Downloaded from https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree

**இவை யாவும் பாராளுமன்ற சட்டத்தின் மூலமாக உருவாக்கப்பட்ட அமைப்புகள் ஆகும்.**

| | | |
|---|---|---|
| 1. | பெண்களுக்கான தேசிய ஆணை National Commission for Women | 1992 |
| 2. | சிறுபான்மையினருக்கான தேசிய ஆணையம் National Commission for Minorities | 1993 |
| 3. | பிற்படுத்தப்பட்டோருக்கான தேசிய ஆணையம் National Commission for Backward Classes | 1993 |
| 4. | தேசிய மனித உரிமை ஆணையம் National Human Rights Commission | 1993 |
| 5. | National Commission for Protection for Child rights | 2007 |
| 6. | மத்திய தகவல் ஆணையம் Central Information Commission | 2005 (RTI-Act 2005) |
| 7. | Central Vigilance Commission | 1964–ம் ஆண்டு சந்தானம் குழுவின் பரிந்துரையின்பேரில் பாராளுமன்ற தீர்மானத்தின்படி உருவாக்கப்பட்டது. உருவாக்கப்பட்டபோது இது அரசியலமைப்பு சாராத மற்றும் சட்ட பூர்வமற்ற அமைப்பாகும். ஆனால் 2003–ம் ஆண்டு பாராளுமன்றத்தில் இயற்றப்பட்ட சட்டத்தின் அடிப்படையில் சட்ட பூர்வமான அமைப்பு என்ற தகுதியை பெற்றுள்ளது. |

**பஞ்சாயத்து ராஜ்**

- 73வது மற்றும் 74வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டம் (1992)
- 11 மற்றும் 12 ஆகிய இரண்டு அட்டவணைகளையும் நாம் பெற்றிருக்கிறோம்.
- 73வது திருத்தச் சட்டம் பஞ்சாயத்துக்களுக்கும்
- 74வது திருத்தச்சட்டம் நகராட்சிகளுக்கும் அரசியலமைப்பு ரீதியான அங்கீகாரம் வழங்குகின்றன.
- பஞ்சாயத்துக்கள் நகராட்சிகளை நிறுவுவதற்காக ஏற்ற சட்டங்களை இயற்றும் அதிகாரம் மாநில சட்டமியற்றும் அவைகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.
- ஒரு பஞ்சாயத்து கலைக்கப்பட்டால், ஆறு மாதங்களுக்குள் மீண்டும் தேர்தல் நடத்தப்பட்டாக வேண்டும்.
- பஞ்சாயத்துத் தேர்தல்களை நடத்துவதற்காக ஒவ்வொரு மாநிலத்திலும் மாநில தேர்தல் ஆணையர் ஒருவர் இருப்பார்.
- பஞ்சாயத்துக்களின் பொருளாதார நிலைமையைப் பற்றிக் கவனிக்க ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை மாநில நிதி ஆணையம் அமைக்கப்படும்.

**நகர பஞ்சாயத்து மற்றும் நகர் பாலிகா**:

- 74வது திருத்தச் சட்டத்தின்படி நகர் பாலிகா மற்றும் நகர பஞ்சாயத்துக்கள் அமைக்க வகை செய்யப்பட்டது. 73வது திருத்தச்சட்டத்தை ஒத்ததாக இட ஒதுக்கீடு தேர்தல் வரிவிதிப்பு அதிகாரம் வளர்ச்சித்திட்டங்கள் மேற்கொள்ளல் நிதி ஆணையம் அமைத்தல் போன்ற அனைத்தும் நகர பஞ்சாயத்துக்கான 74வது திருத்தச்சட்டத்திலும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.



Downloaded from https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree

## சட்ட திருத்தங்கள் (Amendment of the Constitution) (Art 368)

- அரசியலமைப்பை திருத்துவதற்கான பாராளுமன்றத்தின் அதிகாரம், அதற்கான நடைமுறைகள் பற்றி குறிப்பிடுகிறது. (Power of Parliament to amend the constitution & Procedure therefore)

- 1973 கேவானந்தபாரதி கேரளா மாநில வழக்கில் முகவுரையை உள்ளடக்கிய அரசியமைப்பின் எந்தப் பகுதியையும் பாராளுமன்றம் திருத்தலாம். ஆனால் அரசியலமைப்பின் அடிப்படை கட்டமைப்பை திருத்த இயலாது என உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தது.

- 1971 – 24வது சட்டத்திருத்தப்படி அரசியலமைப்பு சட்டத்தை திருத்துவதற்கான நடைமுறைகள் (Procedure for Amendment of the constitutions)என்ற வார்த்தைக்கு பதிலாக அரசியமைப்பு சரத்தை திருத்துவதற்கான "Parliament to amend the constitutions & Precedure therefore" என்ற வார்த்தை சேர்க்கப்பட்டது.

- 1971-24 வது சட்டத்திருத்தத்தில் பாராளுமன்றம் அடிப்படை உரிமைகள் உட்பட அரசியலமைப்பின் எந்த பகுதியையும் திருத்த அதிகாரம் வழங்கப்பட்டது.

- 1976 – 42வது சட்டத்திருத்தப்படி யுசவ 368 ல் பின்வரும் 5 வாசகங்கள் சேர்க்கப்பட்டது.
  1. அரசியலமைப்பு சட்டத்தில் எதையேனும் சேர்த்தல், மாற்றுதல் (திருத்துதல்), நீக்குதல்.
  2. திருத்தம் செய்வதற்கான நடைமுறைகள்.
  3. ஷரத்து 368 ன்படி மேற்கொள்ளப்படும் சட்டதிருத்தத்தை எதிர்த்து நீதிமன்றத்தை அணுக இயலாது.
  4. சட்டதிருத்தம் மேற்கொள்ளும் நாடாளுமன்றத்தின் அதிகாரம் மீது வேறு எந்தவித அதிகாரமும் செலுத்த இயலாது.
- இந்திய அரசியலமைப்பை 3 முறைகளில் (அ) வழிகளில் திருத்தலாம்.
  1. சாதாரண பெரும்பான்மை
  2. சிறப்பு (அ) அரிது பெரும்பான்மை
  3. சிறப்பு பெரும்பான்மை ரூ பாதிக்கு மேற்பட்ட மாநில சட்டமன்றங்களின் ஒப்புதல் மூலம் (Special Majority & the Ratification of half of the State legislatore)

### 1. சாதாரண பெரும்பான்மை

- நாடாளுமன்றத்தில் 50மூ (அ) ½ மேபட்ட உறுப்பினர்களின் ஆதரவோடு திருத்தம் மேற்கொள்ளும் முறையாகும்.
- மாநில சட்டமேலவையை ஏற்படுத்துதல் (அ) நீக்குதல் (Art 239A)
- யூனியன் பிரதேசங்களில் சட்டப்பேரவையை ஏற்படுத்துதல் (Art 239A)
- அரசியலமைப்பின் 2வது, 5வது, 6வது அட்டவணையை திருத்துதல்.
- பாராளுமன்ற (அ) சட்டமன்ற தேர்தல் தொடர்பான திருத்தம்

### 2. சிறப்பு பெரும்பான்மை

- பாராளுமன்றத்தில் 2/3 பங்குக்கு மேல் உறுப்பினர்கள் ஆதரவுடன் திருத்தம் மேற்கொள்ளும் முறையாகும்.
- அடிப்படை உரிமைகள் தொடர்பான திருத்தம்





Downloaded from https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree

- அரசுக்கு வழிகாட்டும் நெறிமுறை கோட்பாடு தொடர்பான திருத்தம்
- 1வது முறை மற்றும் 3வது முறையில் திருத்தப்படாத மற்ற அனைத்தும் திருத்துதல்

## 3. சிறப்பு பெரும்பான்மை ரூ பாதிக்கு மேற்பட்ட மாநில சட்டமன்றங்களின் ஒப்புதல்

- பாராளுமன்றத்தில் சிறப்பு பெரும்பான்மை ஆதரவுடன் திருத்தப்பட்டு, அத்திருத்தத்திற்கு இந்தியாவில் உள்ள பாதிக்கு மேற்பட்ட மாநில சட்டமன்றங்கள் ஒப்புதல் அளிக்கவேண்டும்.
- குடியரசு தலைவர் தேர்தல் ரூ தேர்தல் முறைகள்
- மத்திய, மாநிலங்களின் நிர்வாக அதிகார எல்லை தொடர்பான திருத்தம்.
- உச்சநீதிமன்றம், உயர்நீதிமன்றம் தொடர்பான திருத்தங்கள்.

முக்கிய சட்ட திருத்தங்கள்

| சட்ட திருத்தம் எண் | ஆண்டு | பொருள் |
|---|---|---|
| 1 | 1951 | 9–வது அட்டவணை உருவாக்கம் –நீதிபுனராய்வு விலக்கு சட்டங்கள் |
| 7 | 1956 | மாநிலங்கள் மறு சீரமைப்பு |
| 21 | 1967 | சிந்து மொழி 15 வது மொழியாக 8வது அட்டவணையில் சேர்க்கப்பட்டது. |
| 24 | 1971 | அடிப்படை உரிமைகளை திருத்த பாராளுமன்றத்திற்கு அதிகாரம் வழங்குதல். |
| 42 | 1976 | Mini Constitution- முகவுரை, அடிப்படை உரிமைகள், அரசு வழிகாட்டு நெறிமுறைகள், பாராளுமன்றத்தின் மேலாண்மை குறித்த திருத்தம், கீழவை காலம் 5 லிருந்து 6 வருடமாக அதிகரித்தல் மற்றும் பல. |
| 44 | 1978 | அடிப்படை உரிமையிலிருந்து சொத்துரிமை நீக்கம், கீழவை காலம் 6 லிருந்து 5 வருடமாக குறைத்தல் |
| 52 | 1985 | 10 வது அட்டவணை உருவாக்கம், கட்சித்தாவல் தடை சட்டம் |
| 61 | 1988 | வாக்குரிமை வயது 21 லிருந்து 18 ஆக குறைப்பு |
| 71 | 1992 | கொங்கனி, மணிப்புரி, நேபாளி மொழிகள் 8 வது அட்டவணையில் சேர்க்கப்பட்டது. |
| 73 | 1992 | 11 வது அட்டவணை – பஞ்சாயத்து ராஜ் |
| 74 | 1992 | 12 வது அட்டவணை – நகர் பாலிகா. |
| 76 | 1994 | தமிழகத்தின் 69% இட ஒதுக்கீடு –9 வது அட்டவணையில் சேர்த்தல். |
| 86 | 2002 | கட்டாய கல்வி–ஷரத்து 21A, 45, 51A(K) திருத்தம் |
| 89 | 2003 | 338A-SC/ST–க்கான தேசசிய ஆணையத்திலிருந்து எஸ்டி க்கான தனி தேசிய ஆணையம் உருவாக்கம். |
| 91 | 2003 | 1. மந்திரிகளின் எண்ணிக்கை அதிகபட்சம் (பாராளுமன்ற /சட்ட மன்ற) அவையின் உறுப்பினர்களின்மொத்த எண்ணிக்கையில் 15% என நிர்ணயத்தல். 2. கட்சி தாவல் தடை சட்டத்தில் திருத்தம். |
| 92 | 2003 | போடோ, டோக்ரி, மைதிலி, சந்தாலி ஆகிய மொழிகள் 8வது அட்டவணையில் சேர்க்கப்பட்டது. |
| 93 | 2006 | தனியார் கல்வி நிறுவனங்களில் OBC கான இட ஒதுக்கீடு குறித்து |
| 96 | 2011 | ஒரிசா என்பது ஒடியா என பெயர் மாற்றம் செய்யப்பட்டது. |



Downloaded from https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree

| | | |
|---|---|---|
| **97** | 2012 | கூட்டுறவு சங்கங்களுக்கான சட்ட திருத்தம்.பகுதி – **IX B**, ஷரத்து 19(1) (C) திருத்தம் மற்றும் ஷரத்து 42B- ஐ சேர்த்தல். |
| **99** | 2014 | உயர் நீதி மன்றம் மற்றும் உச்ச நீதி மன்ற நீதிபதிகள் நியமன முறையான **"தேர்வுக்குழு"** முறை **(Collegium system of appointing judges**) நீக்கப்பட்டு **NJAC (National Judicial Appointments Commission)** கொண்டுவரப்பட்டது. இருப்பினும் 2015–ம் ஆண்டில் உச்ச நீதிமன்றம் இச்சட்டத்திருத்தம் செல்லாது என அறிவித்தது. எனவே மீண்டும் பழைய முறையே நடைமுறைக்கு வந்தது. |

Dept . of Employment



Downloaded from https://t.me/tnpscfree


https://t.me/tnpscfree
Join Telegram
Channel :
@tnpscfree
https://t.me/sasiclasses